# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, மாச்சு மாதம் 21 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 56.00** **தபாற் செலவு : ரூபா 13.50**

Scanned with CamScanner

# 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

[2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 27/97 / 4430

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையைத் தாபிப்பதற்கும், வினைத்திறமையான போட்டியையும் பாவனையாளர் பாதுகாப்பையும் முன்னேற்றுவதற்கும், உள்நாட்டு வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், பாவனையாளர் அலுவல்கள் பேரவை ஒன்றைத் தாபிப்பதற்கும், 1979ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தையும், 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தையும், (173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் நீக்கஞ்செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

நியாயமற்ற வியாபாரப் பழக்கவழக்கங்கள் மற்றும் மட்டுப் படுத்தப்பட்ட வியாபாரச் செயற்பாடுகள் என்பவற்றுக்கெதிராக வியாபாரிகளையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாப்பதுடன், பண்டங்களினதும் சேவைகளினதும் வியாபாரத்தையும், விலைகளையும் ஒழுங்குபடுத்துவதன்மூலம் பாவனையாளர்களின் சிறந்த பாதுகாப்பிற்கு ஏற்பாடுசெய்வதும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கின்றதாதலாலும் ; அத்துடன் — முகவுரை.

இலங்கை அரசாங்கமானது, இயலுமானவிடத்தெல்லாம் போட்டி விலைகுறித்தலை மேம்படுத்தி பண்டங்கள், சேவைகளினது வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை உறுதிப்படுத்துவதற்கு விருப்பங் கொண்டுள்ளதாதலாலும் ;

ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக :—

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2-H 017419-700 (2002/11)

Scanned with CamScanner

## பாகம் I

### பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையைத் தாபித்தல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையைத் தாபித்தல்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை என அழைக்கப்படும் ஓர் அதிகாரசபையானது இத்தால் தாபிக்கப்படுகிறது. அது 3 ஆம் பிரிவின்கீழ் அப்போதைக்கு அதிகாரசபையின் உறுப்பினர்களாக இருக்கும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறா வழியுரிமையையும், பொது இலச்சினையொன்றையும் உடையதாக இருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

அதிகார சபையின் அமைப்பு.

**3.** (1) அதிகாரசபையானது, தவிசாளர் ஒருவரையும் அத்துடன் கைத்தொழில், சட்டம், பொருளியல், வர்த்தகம், நிருவாகம், கணக்கியல், அறிவியல் அல்லது சுகாதாரம் ஆகிய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையுடையவர்களும் அத்துறையில் பரந்த அனுபவத்தை உடையவர்களும் சிறப்புக்குரியவர்களாக இருப்பவர்களுமான ஆட்களிடையேயிருந்து, அமைச்சரினால் நியமிக்கப்படும் பத்திற்கு குறையாத வேறு உறுப்பினர்களையும் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

(2) தவிசாளரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து அமைச்சரால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களுள் மூவரும் (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபையின் முழுநேர உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) முழுநேர உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் தவிசாளர், மூன்று முழுநேர உறுப்பினர்கள் தவிர்ந்த அதிகாரசபையின் ஏனைய உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதியம் செலுத்தப்படல் வேண்டும்.

Scanned with CamScanner

(4) இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள் அதிகாரசபை உறுப்பினர்களின் பதவிக்காலம், கூட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் இலச்சினை தொடர்பில் பயனுடையதாதல் வேண்டும்.

தவிசாளரும் முழுநேர உறுப்பினர்களும்.

4. அதிகாரசபையின் தவிசாளரும் முழுநேர உறுப்பினர்களும் அவரவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும். அத்துடன் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அவர்களுடைய சேவைகளுக்காகச் செலுத்தப்படல் வேண்டும்.

அதிகார சபையின் செயலாளராக பணிப்பாளர் தலைமையதிபதி செயற்படல்.

5. பிரிவு 52 என்பதன்கீழ் நியமிக்கப்படும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரசபையின் செயலாளராகச் செயற்படுதல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களுக்குத் தத்துவங்களைக் கையளித்தல்.

6. அதிகாரசபையானது, இந்தச் சட்டத்தின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய பணிகளைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து எவரேனும் பகிரங்க அலுவலருக்கு, அத்தகைய அலுவலருக்கும் அதிகாரசபைக்கும் இடையில் உடன்பட்டுக்கொள்ளக் கூடியதான அத்தகைய நியதி, நிபந்தனைகளுக்கு அமைய, கையளிக்கலாம்.

அதிகார சபையின் குறிக்கோள்கள்.

7. பின்வருவன அதிகாரசபையின் குறிக்கோள்களாதல் வேண்டும் :—

(அ) பாவனையாளர்களின் உயிருக்கும் ஆதனத்துக்கும் தீங்குவிளைவிப்பதான பண்டங்களைச் சந்தைப்படுத்துவதற்கெதிராக அல்லது சேவைகளை வழங்குவதற்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல் ;

(ஆ) நியாயமற்ற வியாபாரப் பழக்கங்களுக்கெதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாத்தலும் பாவனையாளர் நலனுக்கு போதியளவு கவனஞ்செலுத்தப்படுமென்பதற்கு உத்தரவாதமளித்தலும் ;

Scanned with CamScanner

(இ) இயலுமானவிடத்தெல்லாம் பாவனையாளர்கள் நியாயமான விலைகளில் பண்டங்களையும் சேவைகளையும் போதியளவு பெற்றுக்கொள்ளுவதனை உறுதிப்படுத்தல் ; அத்துடன்

(ஈ) நியாயமற்ற வியாபாரப் பழக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரப் பழக்கங்கள் அல்லது வேறுவகைப்பட்ட வழிகளில் வியாபாரிகளால் பாவனையாளர் சுரண்டப்படுதல் என்பவற்றுக்கெதிராக நிவாரணம் தேடுதல்.

அதிகார சபையின் பணிகள்.

8. அதிகாரசபை பின்வரும் பணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) (i) தொழிற்பொறுப்பு முயற்சிகளிடையே மட்டுப்படுத்தும் வியாபார உடன்படிக்கைகளை ;

(ii) விலைகள் தொடர்பில் தொழிற்பொறுப்புமுயற்சிகளிடையே உடன்பாட்டொழுங்குகளை ;

(iii) சந்தைக்குள்ளாக அல்லது சந்தையின் கணிசமான பகுதியில் உள்நாட்டு வியாபாரம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஆதிக்க நிலையைத் துஷ்பிரயோகம் செய்தலை ; அல்லது

(iv) உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்தை அல்லது பொருளாதார அபிவிருத்தியைப் பங்கமாகப் பாதிக்கின்ற போட்டியற்ற ஏதேனும் மட்டுப்பாட்டை

கட்டுப்படுத்தல் அல்லது இல்லாதொழித்தல் ;

(ஆ) போட்டி எதிர்ப்பு நடைமுறைகள் மற்றும் ஆதிக்கநிலையைத் துஷ்பிரயோகம் செய்தல் என்பன பற்றிப் புலனாய்வு செய்தல் அல்லது விசாரணைசெய்தல் ;

(இ) பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் ஆட்களிடையே வினைத்திறமையான போட்டியைப் பேணுதலும் மேம்படுத்துதலும் ;

(ஈ) பண்டங்களினதும் சேவைகளினதும் விலை, அவை கிடைக்கக்கூடிய தன்மை, அவற்றின் தரம் அத்துடன் அவை வழங்கப்படும் வகைகள் என்பன தொடர்பில் அத்தகைய பண்டங்களினதும் சேவைகளினதும் பாவனையாளர்களினதும் கொள்வனவு செய்வோர்களினதும் அத்துடன் வேறு பயன்படுத்துநர்களினதும் நலன்களை மேம்படுத்தலும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் ;

(உ) கொள்வனவுக்குக் கிடைக்கச் செய்யப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் தரம், அளவு, ஆற்றல், தூய்மை, தராதரங்கள் மற்றும் விலை என்பன பற்றிப் பாவனையாளர்களுக்கு அறிவித்தல் ;

(ஊ) இந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் புலனாய்வுகளையும் விசாரணைகளையும் கொண்டுநடாத்துதல் ;

(எ) நடப்பிலுள்ளதைவிடப் போட்டியானது குறைவாக இருக்குமிடத்து, சந்தைகளின் போட்டி விலைகளை மேம்படுத்தல் ;

(ஏ) சந்தை நிலைமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பில் கற்கைகளை மேற்கொள்ளல், அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல் ;

(ஐ) பகிரங்கத்துறையினதும் தனியார்துறையினதும் வினைத்திறமைக் கற்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ஒ) பாவனையாளர்களின் உடல்நலம், காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாவனையாளர் கல்வியை ஊக்குவித்தல் ;

(ஓ) சந்தை நிலைமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பில் வேறு நிறுவனங்களுடன் தகவல் பரிமாற்றத்தை முன்னேற்றுதல் ;

Scanned with CamScanner

(ஔ) பாவனையாளர் ஒழுங்கமைப்புகளைத் தாபிப்பதனை மேம்படுத்தல், உதவுதல் மற்றும் ஊக்கமளித்தல் ;

(க) அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட வேறேனும் சேவைகள் தொடர்பில் அத்தகைய கட்டணங்களை விதித்தல் ;

(ங) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான ஏதேனும் அத்தகைய குழுவை அல்லது குழுக்களை நியமித்தல் ; அத்துடன்

(ச) அதிகாரசபையின் பணிகளை வினைத்திறனுடையதாக நிறைவேற்றுவதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

## பாகம் II

## வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்

அதிகாரசபையானது பண்டங்களினதும் சேவைகளினதும் விநியோகம் ஆய்வு கற்கைகளை மேற்கொள்ளுதல்

9. அதிகாரசபையானது.—

(அ) திருப்திகரமான தரத்தையுடைய ஏதேனும் வகுப்பைச் சார்ந்த பண்டங்களையும் சேவைகளையும் பாவனையாளர்களுக்கு நியாயமான விலைகளிலும் போதுமான அளவுகளிலும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் அத்தகைய பண்டங்களினதும் சேவைகளினதும் விற்பனை அல்லது வழங்குகை தொடர்பிலான அத்தகைய கற்கைகளை மேற்கொள்ளுதல் ;

(ஆ) பந்தி (அ) என்பதில் விவரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பாவனையாளர்களின் அமைப்புகள் உட்பட, அரச அல்லது வேறு அமைப்புகளை முன்னேற்றலையும், அவற்றுக்கு உதவலையும் மற்றும் அவற்றை ஊக்கப்படுத்தலையும் ; அத்துடன்

(இ) பதினான்காம் பிரிவில் விவரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அதிகாரசபையுடன் உடன்படிக்கைகளைச் செய்வதற்கு வியாபாரிகள் வழங்குநர்களுக்கு உதவுதலும் அவற்றை ஊக்குவித்தலும்.

Scanned with CamScanner

பண்டங்களுக்கு விலைகுறித்தல், சுட்டுத்துண்டு ஒட்டுதல், பொதிகட்டுதல் தொடர்பில் உற்பத்தியாளர்களுக்கு அல்லது வியாபாரிகளுக்கு அதிகாரசபையானது பணிப்புரைகளை வழங்குதல்.

10. (1) அதிகாரசபையானது, பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கென,—

(அ) எவையேனும் பண்டங்களுக்கு சுட்டுத்துண்டு ஒட்டுதல், விலைகுறித்தல், பொதிகட்டுதல், விற்பனை செய்தல் அல்லது உற்பத்தி செய்தல் என்பன தொடர்பில் உற்பத்தியாளர்களுக்கு அல்லது வியாபாரிகளுக்கு பொதுவான பணிப்புரைகள் விடுக்கலாம் ; அத்துடன்

(ஆ) (i) அத்தகைய பண்டங்கள் விற்கப்படக்கூடியதான நேரங்களையும் இடங்களையும் ; அத்துடன்

(ii) எவையேனும் பண்டங்கள் உற்பத்திசெய்தல், இறக்குமதி செய்தல், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், சேமித்துவைத்தல், விற்றல் அத்துடன் கையிருப்பில் வைத்தல் பற்றிய வேறெவையேனும் நிபந்தனைகளை

விதித்துரைத்து ஏதேனும் வகுப்பைச் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு அல்லது வியாபாரிகளுக்கு விசேட பணிப்புரைகளை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையால் விடுக்கப்பட்ட ஒவ்வொரு பணிப்புரையும் கசெற்றிலும் ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, ஒரு தமிழ் மற்றும் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது வியாபாரி, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் பணிப்புரை விடுக்கப்பட்ட எவையேனும் பண்டங்களிலுள்ள ஏதேனும் சுட்டுத்துண்டை, விவரணத்தை அல்லது விலைக்குறிப்பை அகற்றுகின்ற, மாற்றுகின்ற, துடைத்தழிக்கின்ற, தேய்த்தழிக்கின்ற அல்லது உருவழிக்கின்ற அல்லது எவையேனும் அத்தகைய பண்டங்களின் அல்லது பண்டங்களிலிருந்து சுட்டுத்துண்டு, விவரணம், அல்லது குறிக்கப்பட்ட விலை அகற்றப்பட்ட, மாற்றப்பட்ட, துடைத்தழிக்கப்பட்ட, தேய்த்தழிக்கப்பட்ட அல்லது உருவழிக்கப்பட்ட அத்தகைய பண்டங்களை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்காக முனைவு செய்கின்ற ஆள் எவரும் இந்தச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.



Scanned with CamScanner

குறிக்கப்பட்ட விலைக்கு மேலாக விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்கு முனைவு செய்தல்.

**11.** பத்தாம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கிணங்க பண்டங்களின் மீது குறிக்கப்பட்ட விலைக்கு மேலாக எவையேனும் பண்டங்களை விற்கின்ற அல்லது விற்பதற்கு முனைவு செய்கின்ற எவரேனும் ஆள் இந்தச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் தொடர்பில் அளவுக் குறிப்பீடுகளையும் நியமங்களையும் தீர்மானித்தல்.

**12.** (1) அதிகாரசபையானது, எவையேனும் பண்டங்களின் ஆக்கம், உற்பத்தி, வழங்கல், களஞ்சியப்படுத்தல், சரக்கேற்றப் போக்குவரத்து அத்துடன் விற்பனை தொடர்பாகவும் எவையேனும் சேவைகளை வழங்கல் தொடர்பாகவும், அத்தகைய நியமங்களையும் அளவுக் குறிப்பீடுகளையும், பாவனையாளரைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது வழங்கப்பட்ட சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலின்மூலம் தீர்மானிக்கலாம்.

(2) அதிகாரசபையானது எவையேனும் பண்டங்களின் ஆக்கம், உற்பத்தி, வழங்கல், களஞ்சியப்படுத்தல், சரக்கேற்றப் போக்குவரத்து ; அத்துடன் விற்பனை என்பன தொடர்பாகவும் எவையேனும் சேவைகளை வழங்கல் தொடர்பாகவும் 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டளைகள் நிறுவகத்தால் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய அளவுக் குறிப்பீடுகளையும் நியமங்களையும் வர்த்தமானியில் வெளியிடும் அறிவித்தலின்மூலம் முதலாம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட வேண்டிய நியமங்களாகவும் அளவுக் குறிப்பீடுகளாகவும் ஏற்றுக்கொள்ளலாம்.

அதிகார சபையானது முறைப் பாடுகளை விசாரணை செய்தல்.

**13.** (1) அதிகாரசபையானது பின்வருவன தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்யலாம் :—

(அ) பன்னிரண்டாம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் அமைவாகவிராத எவையேனும் பண்டங்களின் ஆக்கம், உற்பத்தி, வழங்கல், களஞ்சியப்படுத்தல், சரக்கேற்றப் போக்குவரத்து அல்லது விற்பனை அத்துடன் எவையேனும் சேவைகளின் வழங்கல் ; அத்துடன்

(ஆ) உட்கிடையாக அல்லது வேறுவகையில் உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியால் கொடுக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு அல்லது கட்டுறுத்துக்கு அமைவாகவிராத எவையேனும் பண்டங்களின் உற்பத்தி அல்லது விற்பனை.

Scanned with CamScanner

(2) எவையேனும் பண்டங்களின் விற்பனை அல்லது ஏதேனும் சேவையின் வழங்கல் தொடர்பில் ஒராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஒரு முறைப்பாடு விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய பண்டங்களின் விற்பனையின் அல்லது சேவை வழங்கலின் மூன்று மாதத்திற்குள்ளாக எழுத்தில் அதிகாரசபைக்குச் செய்யப்படல் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் கீழான ஒரு முறைப்பாடு பற்றி நடாத்தப்படும் ஏதேனும் விசாரணையில் அந்த முறைப்பாடு எந்த உற்பத்தியாளருக்கு அல்லது வியாபாரிக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அவர் ஒன்றில் தாமாகவோ அல்லது அவர் சார்பில் நியமிக்கப்பட்ட முகவர் ஒருவர்மூலமோ தம் திறம் உரைப்பதற்கு அதிகாரசபையானது சந்தர்ப்பமொன்றை அவருக்கு அளித்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையால் தீர்மானிக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்டதாகக் கருதப்படும் நியமங்களுக்கு அல்லது அளவுக் குறிப்பீடுகளுக்கு அமைவாகவில்லாத எவையேனும் பண்டங்கள் உற்பத்தி அல்லது விற்பனை அல்லது சேவைகளின் ஏற்பாடு செய்யப்பட்டதென உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியால் உட்கிடையாக அல்லது வேறுவகையாக கொடுக்கப்பட்ட ஏதேனும் கட்டுறுத்துக்கு அல்லது உத்தரவாதத்துக்கு இணங்கியொழுகாது எவையேனும் பண்டங்களின் உற்பத்தி அல்லது விற்பனை செய்யப்பட்டுள்ளதென அல்லது அதிகாரசபையானது முறைப்பாட்டை விசாரித்த பின்னர் அபிப்பிராயப்படுமிடத்து, அது இன்னலுற்ற கட்சிக்காரருக்கு நஷ்டஈடு செலுத்தும்படி அல்லது அத்தகைய பண்டங்களைப் பதிலீடு செய்யும்படி அல்லது விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய பண்டங்களுக்காக அல்லது அத்தகைய சேவை ஏற்பாட்டுக்காக செலுத்தப்பட்ட தொகையைத் திருப்பிக்கொடுக்கும்படி உற்பத்தியாளருக்கு அல்லது வியாபாரிக்கு கட்டளையிடுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழான ஒரு கட்டளை எழுத்தில் செய்யப்படல் வேண்டும் என்பதுடன், பதிவுத்தபால்மூலம் அத்தகைய உற்பத்தியாளருக்கு அல்லது வியாபாரிக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கு எவரேனும் உற்பத்தியாளர் அல்லது வியாபாரி தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து, அத்தகைய உற்பத்தியாளர் அல்லது வியாபாரி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்

Scanned with CamScanner

என்பதுடன் நட்டஈடாக அல்லது மீளளிப்பாக கட்டளையின்படி வருமதியாகவுள்ள பணத்தொகை, அதிகாரசபையினால் அதன் சார்பில் விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் தொழிலிடத்தின்மீது அல்லது வதிவிடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய தொகை நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகை விஞ்சுகின்றது என்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றென்றாற்போன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

பண்டங்களின் ஆகக்கூடிய விலை முதலியவற்றிற்கு உடன்படிக்கை ஏற்பாடு செய்தல்.

**14.** (1) அதிகாரசபையானது எவரேனும் உற்பத்தியாளருடன் அல்லது வியாபாரியுடன் அல்லது ஏதேனும் உற்பத்தியாளர்கள் அல்லது வியாபாரிகள் கழகத்துடன் அது அவசியமெனக் கருதக்கூடியவாறான பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்யும், அத்தகைய எழுத்திலான உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாம் :—

(அ) எவையேனும் பண்டங்களை எந்த விலைக்கு மேலாக விற்கக்கூடாதோ அந்த ஆகக்கூடிய விலை ;

(ஆ) உற்பத்தி செய்யப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட அல்லது விற்பனைக்காக முனைவுசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் நியமமான அளவுக் குறிப்பீடும் ;

(இ) எவையேனும் பண்டங்களின் உற்பத்தி, இறக்குமதி, வழங்கல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், சரக்கேற்றப்போக்குவரத்து, சந்தைப்படுத்தல், சுட்டுத்துண்டு ஒட்டுதல் அல்லது விற்பனை செய்தல் பற்றிய வேறெவையேனும் நிபந்தனைகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கும் எவரேனும் உற்பத்தியாளருக்கும் அல்லது வியாபாரிக்கும் அல்லது உற்பத்தியாளர்கள் அல்லது வியாபாரிகளின் ஏதேனும் கழகத்திற்கும் இடையில் செய்யப்பட்ட எழுத்திலான ஒவ்வோர் உடன்படிக்கையும், அத்தகைய உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் அதிகாரம்பெற்ற விநியோகத்தர் ஒவ்வொருவரும், அத்துடன் அத்தகைய கழகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்தகைய உடன்படிக்கைக்கான கட்சிக்காரர் என்றாற்போன்று, அந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நேரத்தில் அவர் உறுப்பினராக இருந்திருப்பினுஞ்சரி அல்லது இல்லாதிருப்பினுஞ்சரி, அவரைப் பிணிப்பதாதல் வேண்டும்.

Scanned with CamScanner

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் ஏற்பாடெதனையும் மீறுகின்ற ஒவ்வோர் உற்பத்தியாளரும் அல்லது வியாபாரியும் அல்லது அத்தகைய உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் அதிகாரம்பெற்ற விநியோகத்தர் எவரும் அல்லது உற்பத்தியாளர்கள் அல்லது வியாபாரிகள் கழகம் அல்லது அதன் உறுப்பினர் எவராயினும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒவ்வோர் உடன்படிக்கையும் அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் ஒவ்வோர் அதிகாரம்பெற்ற விநியோகத்தரின் அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய கழகத்தின் உறுப்பினர்களின் பெயர்களையும் விவரணத்தையும் தருகின்ற அட்டவணையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையுடன் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை ஒவ்வொன்றும் அந்த உடன்படிக்கையானது ஏதேனும் பின்னரான தேதியில் வலுவுக்கு வருதல் வேண்டுமென அத்தகைய உடன்படிக்கை ஏற்பாடு செய்தாலொழிய, அத்தகைய உடன்படிக்கைத் திகதியிலிருந்து வலுவுக்கு வருதல் வேண்டும்.

(6) அதிகாரசபையானது, தக்கதெனக் கருதின், இப்பிரிவின் கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை எதனையும் கசெற்றில் வெளியிடுவிக்கலாம். உடன்படிக்கையொன்று கசெற்றில் வெளியிடப்பட்டுள்ளவிடத்து அத்தகைய உடன்படிக்கை வெளியிடப்பட்ட கசெற்றின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தலானது, முரணானது எண்பிக்கப்படும்வரை, அத்தகைய உடன்படிக்கையின் உள்ளீடுகள் பற்றிய எண்பிப்பாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் ஏதாயினும் வழக்குத் தொடரும் நோக்கத்திற்காக எவரேனும் ஆள், எவரேனும் உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் அதிகாரம்பெற்ற ஒரு விநியோகத்தராகவுள்ளார் என்று அல்லது ஏதேனும் வியாபாரிகள் அல்லது உற்பத்தியாளர்கள் கழகத்தின் உறுப்பினராகவுள்ளாரென்று அதிகாரசபையால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று, அத்தகைய ஆள் உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் ஓர் அதிகாரம்பெற்ற விநியோகத்தர் அல்லது அத்தகைய கழகத்தின் உறுப்பினர் ஒருவர் என்பதற்குச் சட்ட நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதும் முதற்றோற்றவளவிலான எண்பிப்பாதலும் வேண்டும்.

Scanned with CamScanner

பண்டங்களை விற்பனை செய்ய மறுத்தல் தவறொன்றாதல்.

**15.** (1) இலங்கைக்குள் வியாபார நோக்கங்களுக்கென எவையேனும் பண்டங்களைத் தனது உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வியாபாரி எவரும் அத்தகைய பண்டங்களை விற்பனை செய்வதற்கு மறுத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறியமைக்காக எவரேனும் வியாபாரிக்கெதிரான ஏதேனும் வழக்குத் தொடுப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்—

(அ) சம்பந்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பண்டங்களின் நியாயமான தொகையை அவர் வழங்கினார் என்று அல்லது கோரப்பட்ட தொகையை வழங்குவதற்கு அவரது உடைமையில் போதியதான கையிருப்பு இருக்கவில்லை என்று ;

(ஆ) மொத்த விற்பனை வியாபாரியாக மட்டுமே அவர் அப்பண்டங்களில் வியாபாரம் செய்தார் என்றும் வாங்குநரினால் கோரப்பட்ட தொகையின் விற்பனையானது நடைமுறைக்கு முரணாக இருந்திருக்கும் என்றும் ; அல்லது

(இ) சம்பந்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்பண்டங்களை அவர் விற்பனை செய்தலானது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது 10 ஆம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் அவருக்கு விடுக்கப்பட்ட பொதுவான அல்லது விசேட பணிப்புக்கு முரணாக இருந்திருக்கும் என்று

எண்பித்தல் போதிய எதிர்வாதமாதல் வேண்டும்.

வியாபார நோக்கத்திற்காக எவையேனும் பண்டங்கள் உடைமையில் இல்லை என மறுத்தல் அல்லது ஏதேனும் நிபந்தனைக் கமைய அத்தகைய பண்டங்களின் விற்பனை தவறொன்றாதல்.

**16.** இலங்கைக்குள் வியாபார நோக்கத்திற்காக எவையேனும் பண்டங்களை உடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வியாபாரியொருவர் —

(அ) அத்தகைய பண்டங்கள் உடைமையில் இல்லையென மறுத்தலாகாது ; அல்லது

(ஆ) வேறெவையேனும் பண்டங்களை கொள்வனவு செய்தல் வேண்டுமென அல்லது ஏதேனும் சேவை தொடர்பில் ஏதேனும் கொடுப்பனவைச் செய்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்ற நிபந்தனையொன்றுக்கமைவாக அல்லது வாங்குநர் அத்தகைய பண்டங்களின் விலையை உடனடியாகக் கொடுத்தல் வேண்டுமென்ற நிபந்தனை தவிர்ந்த வேறு ஏதேனும் நிபந்தனைக்கமைவாக அத்தகைய பண்டங்களை விற்பனை செய்வதற்கு முனைவு செய்தலாகாது.

எவரேனும் வியாபாரி அல்லது ஆள் பொருள்களைப் பதுக்கிவைத்தல் தவறொன்றாகும்.

17. (1) எவரேனும் வியாபாரியின் வழமையான சொந்தத் தேவைகளுக்கு மேலதிகமாக, அத்தகைய தொகையினதான எவையேனும் பண்டங்களை, அத்தகைய வியாபாரி அவரது தொழிலிடத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் மறைத்து வைத்தலாகாது.

(2) பின்வரும் அளவுகளுக்கு அதிகமாகவுள்ள அத்தகைய அளவில், எவையேனும் பண்டங்களை எவரேனும் வியாபாரி தனது உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் தனது தொழிலிடத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் வைத்திருத்தலாகாது :-

(அ) அவரது சொந்தப் பாவனைக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் தேவைப்படும் அளவுக்கு அதிகமாக ; அல்லது

(ஆ) அத்தகைய வியாபாரியின் வழமையான வியாபாரச் செயற்பாடுகளின் தேவைப்பாடுகளுக்கு அதிகமாக ; அல்லது

(3) வியாபாரியொருவர் தவிர்ந்த ஆளெவரும், அத்தகைய ஆளின் வழமையான சொந்தத் தேவைகளுக்கு அதிகமாகவுள்ள அத்தகைய அளவில் எவையேனும் பண்டங்களைத் தனது உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருத்தலாகாது.

குறித்தசில பண்டங்களின் அல்லது குறித்தசில சேவைகளின் சில்லறை அல்லது மொத்த விற்பனை விலையை அதிகரித்தல்.

18. (1) எவையேனும் பண்டங்கள் அல்லது ஏதேனும் சேவை சமுதாயத்தின் அல்லது அதன் பாகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதென அமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து, அமைச்சர், அதிகாரசபையின் ஆலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய பண்டங்களை அல்லது சேவையை குறித்துரைக்கப்பட்ட பண்டங்களாக அல்லது, குறித்துரைக்கப் பட்ட சேவையாக விதித்துரைக்கலாம்.

(2) உற்பத்தியாளர் அல்லது வியாபாரி எவரும், அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனன்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பண்டத்தின் அல்லது சேவையின் சில்லறை அல்லது மொத்த விற்பனை விலையை அதிகரித்தலாகாது.

Scanned with CamScanner

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நாடுகின்ற உற்பத்தியாளர் அல்லது வியாபாரி ஒருவர் அதற்கென அதிகாரசபைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையானது, தேவையானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்திய பின்னர் —

(அ) அத்தகைய அதிகரிப்பு நியாயமானதென அது திருப்திப்பட்டால் அத்தகைய அதிகரிப்பை அங்கீகரிக்கலாம்; அல்லது

(ஆ) நியாயமானதென அதிகாரசபை கருதும் வேறு ஏதேனும் அதிகரிப்பை அங்கீகரிக்கலாம்; அத்துடன்

அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அதன் முடிவை உற்பத்தியாளருக்கு அல்லது வியாபாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களினுள் அதிகாரசபையானது, முடிவொன்றைக் கொடுக்கத் தவறுமிடத்து, விண்ணப்பத்தைச் செய்த உற்பத்தியாளர் அல்லது வியாபாரி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், விலையை அதிகரிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அதன் முடிவைக் கொடுப்பதிலான தாமதம், அதிகாரசபையானது விண்ணப்பம்பற்றி அதன் விசாரணையை நிறைவேற்றுவதில் அதனால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் உதவியை அளிப்பதற்கு உற்பத்தியாளர் அல்லது வியாபாரி தவறியமை காரணமானதாகவிருக்குமிடத்து, அதிகாரசபையானது, விண்ணப்பம் பற்றிய அதன் முடிவைச் செய்யும்வரை, விலையை அதிகரிப்பதிலிருந்து சொல்லப்பட்ட உற்பத்தியாளரை அல்லது வியாபாரியைத் தடுக்கின்ற இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்குவதற்கு அதிகாரசபை தத்துவமுடையதாதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதி, கருமங்களைப் பேரவைக்கு ஆற்றுப்படுத்துதல்.*

**19.** (1) உற்பத்தியாளர் அல்லது வியாபாரி ஒருவரினால் மிதமிஞ்சிய விலையில் எவையேனும் பண்டங்கள் விற்கப்படுகின்றன அல்லது எவையேனும் சேவைகள் வழங்கப்படுகின்றன என பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு தோன்றுமிடத்து அல்லது அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது வியாபாரியினால் வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் ஏதேனும் சந்தை

Scanned with CamScanner

உருவாக்கநிலை அல்லது ஏதேனும் சந்தை நிறைவுறா நிலையொன்று காணப்படுகின்றன என பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுகின்றவிடத்து, அவசியமாகக்கூடியவாறான அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு, அத்தகைய கருமத்தைப் பேரவையின் புலனாய்வுக்கும் அறிக்கைக்குமென அதற்கு ஆற்றுப்படுத்தலாம் :-

(அ) அத்தகைய பண்டங்களின் விற்பனை அல்லது சேவைகளின் வழங்குதலானது பொதுவான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாவென்பது; அல்லது

(ஆ) ஏதேனும் வகுதியைச் சார்ந்த பாவனையாளர்கள், அத்தகைய அபரிமித விலையினால் குறிப்பிடத்தக்கமுறையில் பாதிக்கப்படுகின்றனராவென்பது.

(2) பேரவையானது, அதன் புலனாய்வை முடித்து, அதன் அறிக்கையை பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்குச் செய்யப்பட்ட அத்தகைய ஆற்றுப்படுத்துகையிலிருந்து இரு மாதங்களினுள் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

19 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஓர் ஆற்றுப்படுத்துகை பற்றிய புலனாய்வு.

**20.** (1) பத்தொன்பதாம் பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பேரவைக்கு ஏதேனும் ஆற்றுப்படுத்துகை செய்யப்படுமிடத்து, பேரவையின் அபிப்பிராயத்தில் அத்தகைய ஆற்றுப்படுத்துகையின்மீது அதனால் நிறைவேற்றப்படவுள்ள உத்தேச புலனாய்வில் அக்கறையொன்றைக் கொண்டிருக்கக்கூடிய அத்தகைய ஆட்களின் கவனத்துக்கு அத்தகைய ஆற்றுப்படுத்துகையைப் பேரவை கொண்டுவரச்செய்தல் வேண்டுமென்பதுடன், புலனாய்வு எத்தேதியன்று தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அத்தேதிபற்றிய போதிய அறிவித்தலை அத்தகைய ஆட்களுக்கு மேலும் கொடுத்தலும் வேண்டும்.

(2) புலனாய்வொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, பேரவையானது எழுத்திலான அறிவித்தல்மூலம், எவரேனுமாளை அல்லது அத்தகைய ஆளினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளை, அத்தகைய ஆளின் கட்டுக்காப்பின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ளவையும், புலனாய்வின் கீழுள்ள கருமம் தொடர்பானவையும், அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறானவையுமான அத்தகைய ஆவணங்களை அதன்கண் கூறப்பட்ட அத்தகைய நேரத்திலும் இடத்திலும் காண்பிக்கும்படி தேவைப்படுத்தலாம்.



Scanned with CamScanner

(3) புலனாய்வொன்று முடிந்தவுடன், பேரவையானது, 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அதன் முடிவை அதற்கான காரணங்களுடன் வெளியிடச் செய்தல் வேண்டுமென்பதுடன், 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக அத்தகைய புலனாய்வு பற்றிய அறிக்கையொன்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(4) மிதமிஞ்சிய விலையில் பண்டங்கள் விற்கப்படுகின்றன அல்லது சேவைகள் வழங்கப்படுகின்றனவெனப் பேரவை முடிவுசெய்யுமிடத்து, எந்த ஆகக்கூடிய விலைக்கு மேலாக அத்தகைய பண்டங்கள் விற்கப்படலாகாதோ அல்லது அத்தகைய சேவைகள் வழங்கப்படலாகாதோ அத்தகைய ஆகக்கூடிய விலை எந்த விலைக்கட்டமைப்புக்கு இணங்க நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அந்த விலைக்கட்டமைப்பை நிர்ணயித்து எழுத்தில் அதிகாரசபைக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் பேரவையின் விதப்புரைகளைப் பெற்றதன்மேல், அதிகாரசபை, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் எந்த ஆகக்கூடிய விலைக்கு மேலாக பண்டங்கள் விற்பனை செய்யப்படலாகாதோ அல்லது சேவைகள் வழங்கப்படலாகாதோ அந்த ஆகக்கூடிய விலையை நிர்ணயித்தல் வேண்டும். இந்த உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் அத்தகைய கட்டளை அவ்வாறு வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ளதெதுவும், இப்பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட முன்னைய புலனாய்வொன்றன் விடயப்பொருளாக விருந்த அதே கருமத்துக்கு முழுமையாகவோ பகுதியளவிலோ தொடர்பானதாகவுள்ள அடுத்துப்பின்னரானவொரு புலனாய்வைத் தொடர்ந்து நடாத்துவதிலிருந்து பேரவையைத் தடைசெய்வதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(7) அதிகாரசபையினால் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் இடருற்ற எவரேனும் ஆள் அத்தகைய முடிவுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(8) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு இணங்க காண்பிக்கப்படும் ஏதேனும் ஆவணம் அந்தரங்கமானதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆவணத்தில் அடங்கியுள்ள எதுவும், ஏதேனும் சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டவிடத்து தவிர, பேரவையினால் ஆள் எவருக்கும் வெளிவிடப்படுதலாகாது.

Scanned with CamScanner

செய்யப்பட்ட அறுப்படுத்து கையொன்றன் ரீ, பொறுப்பேற்புக் கொடுக்கப்படுதல்.

**21.** (1) இருபதாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழான விதப்புரையொன்றை ஆக்குமுன்னர் அந்நேரத்திலும், பேரவையானது, எந்த உற்பத்தியாளர் அல்லது வியாபாரி தொடர்பில் புலனாய்வானது நிறைவேற்றப்படுகின்றதோ அந்த உற்பத்தியாளரினால் அல்லது வியாபாரியினால் விடயத்துக்கேற்பப் பண்டங்கள் விற்கப்படவேண்டிய விலை தொடர்பாக அல்லது சேவைகள் வழங்கப்படவேண்டிய விலை தொடர்பாக அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது வியாபாரியினால் முனையப்பட்ட ஏதேனும் பொறுப்பேற்பை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்பொன்று ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, பின்வருவனவற்றைச் செய்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் :—

(அ) தோதானதென அது கருதுகின்றவாறான ஒரு முறையில் அத்தகைய பொறுப்பேற்புக்குப் போதிய பிரசித்தம் கொடுத்தல் ;

(ஆ) அத்தகைய பொறுப்பேற்பின் செயற்பாட்டைக் காலத்துக்குக்காலம் மீளாய்தல் ;

(இ) சூழ்நிலைகளிலான ஏதேனும் மாற்றம் காரணமாக—

(i) பொறுப்பேற்பு இனிமேலும் தோதானதாக வரவில்லையாவென்பதையும் இதன் விளைவாக அவ்வாள் பொறுப்பேற்பைச் செயற்படுத்துவதற்கான அவரது கடமையிலிருந்து விடுவிக்கப்படவேண்டுமாவென்பதையும் ; அல்லது

(ii) பொறுப்பேற்புக்கு எவையேனும் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமாவென்பதையும்; அல்லது

(iii) எலவேயுள்ள பொறுப்பேற்பு புதிய பொறுப்பேற்பொன்றினால் மாற்றீடு செய்யப்படவேண்டுமாவென்பதையும்,

கருத்திற் கொள்ளுதல் ; அத்துடன்

(ஈ) அத்தகைய பொறுப்பேற்பைக் கொடுக்கின்ற ஆளுக்கு, பொறுப்பேற்பைச் செயற்படுத்துவதில் அத்தகைய ஆளின் ஏதேனும் தவறுகை அல்லது குறைபாடு பற்றிய அறிவித்தல் கொடுத்தல்.

Scanned with CamScanner

(3) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனப் பேரவை கருதுமிடத்து, பேரவையானது, பின்வருவனபற்றி, பொறுப்பேற்பைச் செய்துகொண்ட ஆளுக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும் :—

(அ) பொறுப்பேற்புக்குச் செய்யப்படுவதற்குத் தேவைப்பட்ட மாற்றங்கள் பற்றி ;

(ஆ) ஏலவேயுள்ள பொறுப்பேற்பை மாற்றீடுசெய்ய வேண்டிய புதிய பொறுப்புமுயற்சியின் தேவைப்பாடுகள் பற்றி ; அல்லது

(இ) பொறுப்பேற்பைச் செயற்படுத்துகின்ற கடமையிலிருந்து அத்தகைய ஆளை விடுவித்தல் பற்றி.

(4) பேரவையானது, (3) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்றை வழங்கியபின்னர்—

(அ) பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க, புதிய பொறுப்பேற்பொன்றுக்கு அல்லது பொறுப்பேற்பு மாற்றப்படுவதற்கு உடன்பட்டு ; அல்லது

(ஆ) வியாபாரியினால் அல்லது உற்பத்தியாளரினால் சொந்த ஊக்குதலின்மீது முனையப்பட்டவாறு புதிய பொறுப்பேற்பொன்றுக்கு அல்லது பொறுப்பேற்பு மாற்றப்படுவதற்கு உடன்பட்டு,

புதிய முடிவொன்றைச் செய்தல் வேண்டும்.

(5) உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியால் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்பு இப்பிரிவின்கீழ் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவிடத்து, அத்தகைய உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியால் செய்யப்பட்ட அத்தகைய பொறுப்பேற்பின் ஏதேனும் மீறுகை இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாதல் வேண்டும்.

பொதுமக்கள் கழகங்கள் அல்லது ஒழுங்கமைப்புகள் குறித்தசில காரியங்களை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தல்.

**22.** (1) எவையேனும் பண்டங்கள் மிதமிஞ்சிய விலையில் விற்கப்படுகின்றவிடத்து அல்லது எவையேனும் சேவைகள் மிதமிஞ்சிய விலையில் வழங்கப்படுகின்றவிடத்தும், பொதுமக்களுள் எவரும் அல்லது, எவரேனும் ஆட்கள் கழகம் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பு, பேரவை அவ்விடயம் பற்றிப் புலனாய்வு செய்யவேண்டுமென விரும்புகின்றவிடத்தும், விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய ஆள், கழகம்

Scanned with CamScanner

அல்லது ஒழுங்கமைப்பு புலனாய்வு செய்வதற்காக, அவ்விடயத்தைப் பேரவைக்கு ஆற்றுப்படுத்துமாறு பணிப்பாளர் தலைமை அதிபதியை வேண்டிக்கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான வேண்டுகோள் ஒன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு பேரவை யினால் புலனாய்வு செய்யப்படவேண்டிய விடயமென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, புலனாய்வுக்கென அவ்விட யத்தை ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் 20 ஆம், 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய புலனாய்வுக்கும் புலனாய்வு தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

அதிகாரசபைக்கான ஆற்றுப்படுத்துகை.

23. எவரேனும் அமைச்சர், தமது சொந்தப் பிரேரணைமீது அல்லது ஆள் ஒருவரினாலும் அல்லது ஆட்கள் குழு ஒன்றி னாலும் அவருக்குச் செய்யப்பட்ட முறையீடுகளின்மேல், எவையேனும் பண்டங்களின் விலை அல்லது ஏதேனும் சேவைக்கான விதிப்பளவு தொடர்பிலான பிரச்சினையெதனை யும், ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கென அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன் அதற்கிணங்க, அதிகாரசபை யானது அத்தகைய பிரச்சினையை ஆராய்ந்து அமைச்சருக்கு அத்தகைய ஆற்றுப்படுத்துகையைப் பெற்றுக்கொண்ட தேதி யிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக அதன் அறிக்கையை அனுப்புதலும் வேண்டும்.

பண்டங்களின் விலைகள் முதலியன தொடர்பிலான பிரச்சினைகளை பேரவை மீளாய்வு செய்தல்.

24. அதிகாரசபையானது, ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணைமூலம் அல்லது ஆளெவரினாலும் அல்லது ஆட்கள் குழு எதனாலும் செய்யப்பட்ட முறையீடுகளின்மேல், எவையேனும் பண்டங்களின் விலை அல்லது ஏதேனும் சேவைக்கான விதிப்பளவு என்பன தொடர்பிலான பிரச்சினையெதனையும் மீளாய்வு செய்து, அமைச்சருக்கு அறிக்கை செய்யலாம்.

இச்சட்டத்தின் கீழ்ச்செய்யப்பட்ட அறிக்கையை வெளியிடுதல்.

25. அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கையை அல்லது அத்தகைய அறிக்கையில் செய்யப்பட்ட எவையேனும் விதப்புரைகளை, அவர் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையில் வெளியிடுவிக்கலாம்.

Scanned with CamScanner

**வியாபாரி விலைப் பட்டியலை வெளிக்காட்டி வைத்தல்.**

**26.** (1) வியாபாரி ஒவ்வொருவரும், எவையேனும் பண்டங்களின் விலை அப்பண்டங்களின்மீது அல்லது அதனைக் கொண்டுள்ள சுற்றுறையின்மீது அல்லது பொதியின்மீது குறிப்பிடப்பட்டிருந்தால் அல்லது சட்டத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான வேறேதேனும் முறையில் குறிப்பிடப்பட்டிருந்தால் தவிர, தனது தொழிலிடத்தில் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லாப் பண்டங்களினதும் விடயத்திற்கேற்ப ஆகக்கூடிய சில்லறை விலையை அல்லது மொத்த விற்பனை விலையைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை அவரது தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(2) விற்பனைக்காகக் கிடைக்கத்தக்கதான பண்டங்களினது பூரணமான விலைப்பட்டியல் தேவைப்படுத்தப்படும்பொழுது, பார்வையிடப்படுவதற்காக எல்லா நேரங்களிலும் தொழிலிடத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**வியாபாரிகளைப் பதிவு செய்தல்.**

**27.** வியாபாரி ஒவ்வொருவரும் அமைச்சரால் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறு ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத பணத்தொகையொன்றைக் கொண்ட ஆண்டுக்கட்டணமொன்றின் கொடுப்பனவின்மீது அதிகாரசபையுடன் பதிவு செய்தல் வேண்டும்.

**கொள்வனவு காரர்களுக்கு பற்றுச்சீட்டுக்களை வியாபாரிகள் வழங்குதல்.**

**28.** எவையேனும் பண்டங்களை விற்பனை செய்யும் வியாபாரி ஒவ்வொருவரும், பின்வருவனவற்றைக் காட்டும் பற்றுச் சீட்டொன்றை அப்பொருளின் கொள்வனவுகாரரினால் கோரப்பட்டவுடனே அவருக்கு வழங்குதல் வேண்டும் :—

(அ) விற்பனைத் திகதி ;

(ஆ) விற்பனைசெய்யப்பட்ட பண்டங்களின் அளவு ;

(இ) அத்தகைய அளவுக்குச் செலுத்தப்பட்ட விலை ;

(ஈ) கொடுக்கல் வாங்கலின் தன்மை, அதாவது அவ்விற்பனை மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ; அத்துடன்

(உ) வியாபாரி ஒருவரினால் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுதல் தொடர்பாக ஏதேனும் சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடியதாயிருக்கும் எவையேனும் வேறு தேவைப்பாடுகள்.

Scanned with CamScanner

29. (1) வியாபாரி ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின்கீழ் அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலை, பணிப்புரையை அல்லது எச்சரிக்கையை வெளிக்காட்டி வைப்பதற்கென, அவரது தொழிலிடத்தில் துலாம்பரமானவோர் இடத்தில் அறிவித்தற் பலகையொன்றை ஏற்பாடுசெய்தல் வேண்டும். வியாபாரி அறிவித்தற் பலகையை ஏற்பாடு செய்தல்

(2) வியாபாரி ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையால் அத்தகைய வியாபாரிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலை, பணிப்புரையை அல்லது எச்சரிக்கையை அத்தகைய அறிவித்தற் பலகையில் ஒட்டுதல் வேண்டும் அல்லது ஒட்டுவித்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் பணிப்பின்கீழ் அல்லது அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் ஆள் தவிர, அத்தகைய அறிவித்தலை, பணிப்புரையை அல்லது எச்சரிக்கையை அகற்றும், மாற்றும் துடைத்தழிக்கும், தேய்த்துதழித்து விடும் அல்லது உருவழிக்கும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டும்.

30. வியாபாரி எவரும் ஒரு வியாபாரத்தின்போது அல்லது தொழிலின்போது பாவனையாளரை அல்லது வேறு எவரேனும் வியாபாரியை பிழைவழி உய்க்கும் அல்லது ஏமாற்றும் நடத்தை யில் அல்லது பிழைவழி உய்க்கும் அல்லது ஏமாற்றும் இயல்பு டைய எந்த வகையிலான நடத்தையிலும் ஈடுபடுதலாகாது. பிழைவழி உய்க்கும் அல்லது ஏமாற்றும் இயல்புடைய நடத்தை.

31. ஒரு வியாபாரத்தின்போது அல்லது தொழிலின்போது, பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவது சம்பந்தமாக அல்லது வழங்கும் சாத்தியம் சம்பந்தமாக அல்லது பண்டங் களை அல்லது சேவைகளை வழங்குதலை அல்லது பயன் படுத்துதலை எவ்வகையிலேனும் மேம்படுத்துதல் சம்பந்தமாக— பொய்யான திரித்துக் காட்டல்கள்.

(அ) பண்டங்கள் அல்லது சேவைகள் குறிப்பிட்டவொரு நியமத்தினவானவை, திறத்தினவானவை அல்லது தரத்தினவானவை அல்லது பண்டங்கள் குறிப்பிட்ட வொரு வகையினவானவை அல்லது மாதிரியானவை எனப் பொய்யாகத் திரித்துக்காட்டுகின்ற ; அல்லது

(ஆ) பண்டங்கள் புதியவனவெனப் பொய்யாகத் திரித்துக்காட்டுகின்ற ; அல்லது

Scanned with CamScanner

(இ) பண்டங்கள் அல்லது சேவைகள், அவை கொண்டிராத ஆதரவளிப்பை, அங்கீகாரத்தை, சாதனையை, பண்பியல்புகளை, பயன்பாடுகளை அல்லது நன்மைகளை உடையனவெனப் பொய்யாகத் திரித்துக்காட்டுகின்ற ; அல்லது

(ஈ) தாம் கொண்டிராத ஆதரவளிப்பை, அங்கீகாரத்தை அல்லது உறவை உடையவரெனப் பொய்யாகத் திரித்துக்காட்டுகின்ற ; அல்லது

(உ) விலைகுறைப்புகள் அல்லது விலை அதிகரிப்புகள் இருக்கின்றமை பற்றி அல்லது விலை குறைப்புக்களின் அல்லது அதிகரிப்புகளின் பணத்தொகைகள் பற்றி பொய்யான அல்லது பிழைவழி உய்க்கும் கூற்றுக்களைச் செய்கின்ற ; அல்லது

(ஊ) எவைபோனும் பண்டங்கள், சேவைகள், மாற்றீடுகள் அல்லது பழுதுபார்த்தல்கள் அவசியமானவையுள்ளமை பற்றிப் பொய்யான அல்லது பிழைவழி உய்க்கும் கூற்றுக்களைச் செய்கின்ற ; அல்லது

(எ) ஏதேனும் கட்டுறுத்து அல்லது ஏதேனும் உத்தரவாதம் இருக்கின்றமை பற்றி அல்லது அதன் பயன் பற்றி பொய்யான அல்லது பிழைவழி உய்க்கும் கூற்றுக்களைச் செய்கின்ற.

எவரேனும் வியாபாரி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குதல் தொடர்பான கட்டுறுத்துகள்.

**32.** (1) பாவனையாளரொருவருக்கு பண்டங்களை வழங்குவதற்கான அல்லது சேவைகளை ஏற்பாடுசெய்கின்ற ஒரு தொழிலின்போது எவரேனும் ஆளினால் அத்தகைய பண்டங்களை வழங்குவதற்கான அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் —

(அ) அச்சேவைகள் உரிய கவனத்துடனும் திறமையுடனும் ஏற்பாடு செய்யப்படுமெனவும் ;

(ஆ) அத்தகைய சேவைகள் ஏற்பாடுசெய்தல் சம்பந்தமாக வழங்கப்படும் எவைபோனும் பொருட்கள் அவை வழங்கப்படும் அந்த நோக்கத்திற்கு நியாயமாகப் பொருத்தமானவையாயிருக்குமெனவும் ;

Scanned with CamScanner

(இ) வழங்கப்பட்ட பண்டங்கள் அல்லது ஏற்பாடு செய்யப்படும் சேவைகள் இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட நியமங்களுடனும் அளவுக் குறிப்பீடுகளுடனும் இசைந்தொழுகுவன வாக விருக்குமெனவும் ; அத்துடன்

(ஈ) வழங்கப்படும் பண்டங்கள் அவை வழங்கப்படும் நோக்கத்துக்கு நியாயமானளவு பொருத்தமானவை யாக இருக்குமெனவும்.

உட்கிடையான கட்டுறுத்து உண்டு.

(2) ஒரு தொழிலின்போது வியாபாரியொருவர் அல்லது வியாபாரி ஒருவர் தவிர்ந்த எவரேனும் ஆள் பாவனையாள ருக்கு எவையேனும் பண்டங்களை வழங்குமிடத்தும், அல்லது எவையேனும் சேவைகளை ஏற்பாடு செய்யுமிடத்தும் அந்தப் பாவனையாளர், அந்தப் பண்டங்கள் அல்லது சேவைகள் குறிப்பிட்ட எந்த நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்றதோ அந்த நோக்கத்தை, அல்லது அந்தச் சேவைகளிலிருந்து அவர் பெறுவதற்கு விரும்பும் விளைவைப் பற்றி வியாபாரிக்கு அல் லது வேறு ஆளுக்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக தெரியப்படுமிடத்தும், அந்தச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தின்கீழ் வழங்கப்பட்ட சேவைகளும் அந்தச் சேவைகள் சம்பந்தமாக வழங்கப்பட்ட எவையேனும் பொருட்களும் வியா பாரியின் அல்லது அத்தகைய வேறு ஆளின் திறமையின்மீது, அல்லது நிதானிப்பின்மீது பாவனையாளர் நம்பியிருக்கவில்லை அல்லது அவற்றை அவர் நம்புவது நியாயமற்றது என்பதைச் சூழ்நிலைகள் காட்டுமிடத்தன்றி, அந்த நோக்கத்திற்கு நியாய மாகப் பொருத்தமாகவிருக்கும் என்ற அல்லது அத்தகைய தன்மையையும் திறத்தையும் கொண்டுள்ளமையால் அவை அந்த விளைவைப் பெறக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்பட லாம் என்ற உட்கிடையான கட்டுறுத்து உண்டு.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவாறாக உட்கிடையான கட்டுறுத்தொன்றன் மீறுகை யின்மூலம் இடருற்ற பாவனையாளர் ஒருவர் விடயத்துக்கேற் றாற்போல அத்தகைய பண்டங்களின் வழங்குதலை அல்லது அத்தகைய சேவைகளை ஏற்பாடுசெய்யும் அத்துடன் அச்சேவைகளை ஏற்பாடுசெய்தல் சம்பந்தமாக வழங்கப்பட்ட பொருட்களின் வழங்குதலையும் அளித்ததிலிருந்து ஒரு மாதத்தினுள் அத்தகைய மீறுகைக்கு எதிராக எழுத்தில் அதிகாரசபைக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம்.



Scanned with CamScanner

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாட்டின் மீது நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின்போது, அதிகார சபையானது, அம்முறைப்பாடானது எந்த வியாபாரிக்கு அல்லது வேறு ஆளுக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அந்த வியாபாரிக்கு அல்லது வேறு ஆளுக்கு நேரடியாக அல்லது அதன்சார்பில் முகவர் மூலமாக தம்திறம் கூறுவதற்கான வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) விசாரணையின்பின்னர், உட்கிடையான கட்டுறுத் தொன்றின் மீறுகையொன்று இடம்பெற்றுள்ளது என அதிகாரசபையானது அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அது, வியாபாரியை அல்லது வேறு ஆளை, இடருற்ற திறத்தவருக்கு நட்டஈட்டைச் செலுத்தும்படி அல்லது கட்டளையில் குறித் துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய பண்டங்களை வழங்கிய மைக்காக அல்லது அத்தகைய சேவைகளை ஏற்பாடுசெய்த மைக்காகவும் அச்சேவைகளை ஏற்பாடுசெய்தமை தொடர்பாக எவையேனும் பொருட்களை வழங்கியமைக்காகவும் செலுத் துப்பட்ட தொகையை மீளளிக்கும்படி கட்டளையிடல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழான கட்டளை ஒன்று எழுத்தில் செய்யப்பட்டு பதிவஞ்சல்மூலம் அத்தகைய வியாபாரிக்கு அல்லது வேறு ஆளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(7) எந்த வியாபாரிக்கெதிராக அல்லது வேறு எவரேனும் ஆளுக்கெதிராக (5) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த வியாபாரி அல்லது வேறு எவரேனும் ஆள், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் விடயத்திற்கேற்றவாறாக, அத்தகைய நட்டஈட்டைச் செலுத்துவதற்கு அல்லது செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தொகையை மீளளிப்பதற்கு தவறுகின்ற விடத்து, அல்லது மறுக்கின்றவிடத்து, அத்தகைய தொகை யானது, எந்த வியாபாரி அல்லது அத்தகைய வேறு ஆளுக்கு எதிராகக் கட்டளையானது செய்யப்பட்டதோ அந்த

வியாபாரியின் அல்லது அத்தகைய வேறு ஆளின் தொழிலிடத்தின் மீது அல்லது வதிவிடத்தின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்திற்கு, அதிகாரசபையினால் அதன் சார்பில் விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மேல், அந்த நீதிமன்றமானது, அதன் சாதாரண நியாயாதிக்கதைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை அத்தகைய தொகையானது, விஞ்சக்கூடியதாக இருப்பது எப்படியிருப்பினும், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்று என்றாற்போன்று அதேமுறையில் அறவிடப்படலாம்.

**33.** அமைச்சரின் வேண்டுகோளின் பேரில், அதிகாரசபையானது, பகிரங்கத்துறை மற்றும் தனியார்துறை வினைத்திறமை ஆய்வொன்றைக் கொண்டுநடாத்தி அமைச்சருக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல் அமைச்சரின் கடமையாதல் வேண்டும். பகிரங்க வினைத்திறமை அறிக்கைகள்.

## பாகம் III

### போட்டியையும் பாவனையாளர் நலனையும் மேம்படுத்தல்

**34.** (1) அதிகாரசபையானது, அதன் சொந்தப் பிரேரணையின் மேல் அல்லது எவரேனும் ஆளினால், ஏதேனும் பாவனையாளர் ஒழுங்கமைப்பினால் அல்லது வியாபாரிகளின் கழகத்தினால் அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றின்மேல் அல்லது வேண்டுகோளின்மேல் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளின் உள்ளமை தொடர்பில் புலனாய்வு ஒன்றினைக் கொண்டு நடாத்தலாம். போட்டி எதிர்ப்பு நடைமுறைகள் பற்றி அதிகாரசபை புலனாய்வு களைக் கொண்டு நடாத்துதல்.

(2) ஓராமுட்பிரிவின்கீழான புலனாய்வொன்று தொடங்கப்பட்ட நூறு நாட்களினுள் அதனைப் பூரணமாக்குதல் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

Scanned with CamScanner

போட்டி எதிர்ப்பு நடைமுறை.

**35.** முப்பத்திநாலாம் பிரிவின் நோக்கத்திற்காக, ஆளொருவர், அவரது தொழிற்போக்கின்போது, நடத்தைப் போக்கொன்றைப் பின்பற்றுகின்றவிடத்து, அந்நடத்தைப் போக்கானது அதுவாகவோ அல்லது அவருடன் சேர்ந்துள்ள ஆட்களினால் பின்பற்றப்படும் நடத்தைப் போக்கொன்றுடன் சேர்த்து கொள்ளப்படும்போதோ, இலங்கையில் பண்டங்களின் தயாரிப்பு, வழங்கல் அல்லது கொள்ளல் அல்லது இலங்கையில் சேவைகளை வழங்கல் அல்லது பெற்றுக்கொள்ளல் தொடர்பாகப் போட்டியை மட்டுப்படுத்துகின்ற, மாறான வழியில் இட்டுச் செல்லுகின்ற அல்லது தடுக்கின்ற பயனைக் கொண்டிருந்தால் அல்லது கொண்டிருப்பதற்கு உட்கருதியிருந்தால் அல்லது கொண்டிருக்கும் சாத்தியக்கூறுடையதாகவிருந்தால், போட்டியெதிர்ப்பு நடைமுறையொன்று நிலவுவதாகக் கருதப்படல் வேண்டும்.

33 ஆம் பிரிவின் கீழான புலனாய்வுகள் தொடர்பிலான ஏற்பாடுகள்.

**36.** (1) அதிகாரசபையானது, 34 ஆம் பிரிவின் கீழான புலனாய்வின் விடயத்தை உருவாக்குகின்ற கருமமொன்றில் அக்கறைகொண்டுள்ள கழகங்களின் பிரதிநிதிகள் அல்லது பாவனையாளர்களின் ஒழுங்கமைப்புகள் உட்பட எல்லா ஆட்களுக்கும், அதிகாரசபையின் அபிப்பிராயத்தில் அத்தகைய கருமத்திற்கு இயைபானதாகவிருக்கின்றதான அத்தகைய வாய்மூல அல்லது ஆவணச்சான்றை விசாரிக்கும் மற்றும் சமர்ப்பிக்கும் வாய்ப்பொன்றை வழங்கலாம்.

(2) முப்பத்திநாலாம் பிரிவின் கீழ் புலனாய்வைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக, பின்வருவனவற்றைச் செய்வதற்கு அதிகாரசபையானது, மாவட்ட நீதிமன்றமொன்றின் பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) எவரேனும் சாட்சிக்கு அறிவித்தல் வழங்குவதற்கும் அவர் சமுகமாயிருப்பதைத் தேவைப்படுத்துவதற்கும் ;

(ஆ) ஆவணங்களை அல்லது பதிவேடுகளைச் சமர்ப்பிப்பதனைத் தேவைப்படுத்துவதற்கும் ; அத்துடன்

(இ) எவரேனும் சாட்சிக்கான ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிப்பதற்கும்.

Scanned with CamScanner

(3) எவரேனும் ஆள் –

(அ) போதிய காரணமின்றி, ஏதேனும் புலனாய்வு நடந்துகொண்டிருக்கும்போது அல்லது புலனாய்வு முடிவடைந்ததன்பின்னர், அதிகாரசபைக்கு அல்லது அதன் எவரேனும் உறுப்பினருக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணக்கூடியதான, ஏதேனும் கூற்றை வெளியிடுகின்றவிடத்து அல்லது எதனையும் செய்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) அதிகாரசபையின் சட்டரீதியான மன்றாணை முதலியவற்றுடன் தலையிடுகின்றவிடத்து ; அல்லது

(இ) புலனாய்வு ஒன்றின்போது –

(i) அத்தகைய ஆளுக்கு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அறிவித்தல் எதிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் அதிகாரசபையின் முன்னர் தோன்றுவதற்கு நியாயமானதான காரணமின்றி, தவறுகின்றவிடத்து ; அல்லது

(ii) சத்தியம்செய்ய அல்லது உறுதியுரை செய்ய மறுக்கின்றவிடத்து அல்லது முறையாகச் சத்தியஞ்செய்தபின்னர் அல்லது உறுதியுரை எடுத்தபின்னர் அதிகாரசபையினால் புலனாய்வு செய்யப்படுகின்ற எவையேனும் கருமங்கள் தொடர்பில் அவரிடம் கேட்கப்படும் எவையேனும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு, நியாயமானதாகவிருக்கின்ற காரணம் இல்லாமல் மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து ; அல்லது

(iii) அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்றதான அதிகாரசபையினால் புலனாய்வு செய்யப்படும் எதேனும் கருமத்திற்கு இயைபானதென அதிகாரசபை, அபிப்

Scanned with CamScanner

பிரயோகிக்கப்படும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டை அதிகாரசபைக்குச் சமர்ப்பிப்பதற்கும் காட்டுவதற்கும் மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து,

அத்தகைய ஆள், அதிகாரசபையை அதிகாரத்தை அவமதிப்பதான அல்லது மரியாதை செய்யத் தவறியதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அத்தகைய தவறுக்காக தண்டிக்கப்படக் கூடியவராதலும் வேண்டும்.

(4) ஆளொருவர் அதன் அதிகாரத்திற்கெதிராக அல்லது அதனை அவமதித்து ஏதேனும் அவமதிப்புத் தவறைப் புரிந்துள்ளார் என அதிகாரசபை தீர்மானிக்கின்றவிடத்து, அதன் தீர்மானத்தை எடுத்துக்காட்டும் சான்றிதழொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரசபை அதன் பணிப்பாளர் தலைமையதிபதியை அனுப்பிவைக்குமாறு செய்விக்கலாம் என்பதுடன் அத்தகைய சான்றிதழ் ஒவ்வொன்றும் அதிகாரசபையின் தவிசாளரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நீதி நெறிக்கவனத்திற்கெடுப்பது பொருத்தமானதென மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதக்கூடிய அவமதிப்புத் தவறொன்றைத் தண்டிப்பதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் (4) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கையொப்பமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றாகக் கொள்ளப்படும் ஏதேனும் ஆவணம், அதன்கண் எடுத்துக்காட்டப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளின் சான்றாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தீர்மானம் அதிகாரசபையினால் செய்யப்பட்டதென்பதற்கு முடிவான சான்றாதலும் வேண்டும்.

அதிகாரசபை பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல்.

**37.** (1) முப்பத்திநாலாம் பிரிவின்கீழ் புலனாய்வொன்று முடிவடைந்ததன் மேல், அதிகாரசபையானது, அத்தகைய கருமம் தொடர்பில் தீர்மானம் ஒன்றைச் செய்யும் நோக்கத்திற்காகப் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

Scanned with CamScanner

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பம் எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்திற்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

ஏவரேனும் ஆளினால் அல்லது வியாபாரிகள் கழகத்தினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை பேரவை ஏற்றுக் கொள்ளுதல்.

**38.** முப்பத்திநாலாம் பிரிவின்கீழ் அதிகாரசபையினால் புலனாய்வொன்று செய்யப்பட்டு முடிவடைந்ததன்மேல் அத்தகைய புலனாய்வு தொடர்பாக 37 ஆம் பிரிவின்கீழ் அதிகாரசபை பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதில்லையென முடிவுசெய்கின்றவிடத்து, எந்த ஆளின் அல்லது ஏதேனும் பாவனையாளர் ஒழுங்கமைப்பின் வியாபாரிகள் கழகத்தின் முறைப்பாட்டின்மீது அல்லது வேண்டுகோளின் மீது அத்தகைய புலனாய்வு கொண்டுநடாத்தப்பட்டதோ, விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய ஆள் அல்லது வியாபாரிகள் கழகம் பேரவைக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான விண்ணப்பத்தின் மூலம் —

(அ) அதிகாரசபை புலனாய்வுமீதான அதன் அறிக்கையைப் பேரவைக்குச் சமர்ப்பிக்கும்படி கேட்குமாறு; அத்துடன்

(ஆ) தீர்மானிப்பதற்கு அத்தகைய விண்ணப்பத்தை எடுத்துக்கொள்ளுமாறு பேரவையைக் கட்டாயப்படுத்துவதற்கு அந்த அறிக்கையில் போதுமானளவு விடயம் இருக்கின்றதென பேரவை அபிப்பிராயப்படுகின்றவிடத்து அத்தகைய விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானிக்குமாறு,

பேரவையை வேண்டிக்கொள்ளலாம்.

## பாகம் IV

### பாவனையாளர் அலுவல்கள் பேரவை

பாவனையாளர் அலுவல்கள் பேரவையைத் தாபித்தலும் அதன் அமைப்பும்.

**39.** (1) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பாவனையாளர் பாதுகாப்புப் பேரவை" என அறியப்படவேண்டிய பேரவை ஒன்று இச்சட்டத்தின் நோக்கத்திற்காகத் தாபிக்கப்படல் வேண்டும்.

Scanned with CamScanner

(2) பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) வர்த்தகச் சட்டத்துறையில் பரந்த அனுபவம் கொண்ட ஆள் ஒருவர் ;

(ஆ) தொழிற்பொறுப்பு முயற்சியினை முகாமைசெய்வதில் பரந்த அனுபவம் கொண்ட ஆள் ஒருவர் ; அத்துடன்

(இ) வியாபார நடைமுறைகளிலும் பாவனையாளர் அலுவல்களிலும் பரந்த அனுபவம் கொண்ட பொருளியலாளர் ஒருவர்.

(3) பேரவையின் உறுப்பினர்கள் மூன்று வருடக் காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். அமைச்சர் உறுப்பினர்களுள் ஒருவரை அதன் தலைவராகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய வேதியம் பேரவை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

(5) பேரவைக்குச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். இவர், பேரவையின் சகல நடவடிக்கைகளும் பற்றிய பதிவேடுகளைப் பேணுவதற்கும் இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் அனுப்பப்படவேண்டிய எவையேனும் அறிவித்தல்களை அனுப்புவதற்கும் பொறுப்புடையவராக இருப்பார்.

பேரவையின் பணி.

40. (1) பேரவையின் பணியானது, இச்சட்டத்தின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட சகல விண்ணப்பங்களையும் ஆற்றுப்படுத்துகைகளையும் விசாரித்துத் தீர்மானித்தலாகும்.

(2) பேரவையின் முடிவொன்று ஏகமனதானதாக இராதவிடத்து, பெரும்பான்மை உறுப்பினர்கள் முடிவே பேரவையின் முடிவாகக் கருதப்படுதல் வேண்டும்.

Scanned with CamScanner

41. (1) விடயத்துக்கேற்றாற்போல 37 ஆம் பிரிவின் அல்லது 38 ஆம் பிரிவின்கீழ் பேரவைக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டவிடத்து, பேரவையானது — பேரவையினால் செய்யப்பட வேண்டிய கட்டளை.

(அ) போட்டி எதிர்ப்பு நடைமுறை ஒன்று இருக்கின்றதாகவும் ஆனால் அத்தகைய போட்டி எதிர்ப்பு நடைமுறை பொதுமக்கள் அக்கறைக்கு எதிராகச் செயற்படமாட்டாது அல்லது செயற்படக் கூடிய சாத்தியம் இல்லையென அது திருப்தியடைந்துள்ளதன் மேல், அதன் சார்பில் ஆக்கப்படும் கட்டளை மூலம் அத்தகைய போட்டி எதிர்ப்பு நடைமுறைக்கு அதிகாரமளித்தல் வேண்டும் ;

(ஆ) போட்டி எதிர்ப்பு நடைமுறை ஒன்று இருக்கின்றதெனவும் பொதுமக்கள் தவறுக்கெதிராக அது தொழிற்படுகின்றதெனவும் திருப்திப்படுகின்றதன் மேல், அதன் சார்பில் ஆக்கப்படும் கட்டளைமூலம் —

(i) அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய போட்டியெதிர்ப்பு நடைமுறையை முடிவுறுத்தலுக்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) போட்டியெதிர்ப்பு நடைமுறை, எதனதும் பாதகமான தாக்கங்களைச் சீர்ப்படுத்தும் அல்லது தடுக்கும் நோக்கத்துக்காக அவசியமானதென பேரவை கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்காக, ஏதேனும் போட்டி எதிர்ப்பு நடைமுறை பொதுமக்கள் நலனுக்கெதிராகத் தொழிற்படுகிறதா அல்லது தொழிற்படும் சாத்தியம் உள்ளதா எனத் தீர்மானிப்பதில் பேரவையானது புலனாய்வின் கீழுள்ள கருமத்திற்கு இயைபானதென அத்தகைய பேரவைக்குத்

தோன்றும் எல்லா விடயங்களையும் கருத்திற்கெடுத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் கருமங்களை மேற் கொள்ளுவதன் அனுகூலம்பற்றி விசேட கவனத்துக் கெடுத்தலும் வேண்டும் :–

(அ) பண்டங்களை வழங்குகின்ற மற்றும் சேவைகளை ஏற்பாடுசெய்கின்ற ஆட்களுக்கு இடையேயுள்ள வினைத்திறமையான போட்டியைப் பேணுதலும் மேம்படுத்துதலும் ;

(ஆ) அத்தகைய பண்டங்களினதும் சேவைகளினதும் விலை தொடர்பாகவும் தரம் தொடர்பாகவும் இலங்கையில் வழங்கப்படும் பண்டங்களினதும் ஏற்பாடுசெய்யப்படும் சேவைகளினதும் பாவனையாளர்களினதும் கொள்வனவுகாரரினதும் அத்துடன் பண்டங்களையும் சேவைகளையும் பயன்படுத்தும் ஏனையோரினதும் அக்கறைகளை மேம்படுத்துதல் ;

(இ) போட்டிமூலம் செலவுகளைக் குறைப்பதனையும் புதிய தொழில்நுட்பமுறைகளையும் தயாரிப்புக்களை யும் அபிவிருத்தி செய்தல் மற்றும் பயன்படுத்துதல் அத்துடன் இப்போதுள்ள சந்தைகளுக்குப் புதிய போட்டியாளர்கள் அமைவதனை இயலச்செய்தல்.

(3) விடயத்துக்கேற்றாற்போல 37 ஆம் பிரிவின்கீழ் அல்லது 38 ஆம் பிரிவின்கீழ் பேரவைக்கு விண்ணப்பமொன்று செய்யப் பட்டவிடத்து, அது கிடைக்கப்பெற்ற ஒரு மாதத்துக்குள்ளாக அத்தகைய விண்ணப்பத்தின் மீது அக்கட்டளையை ஆக்குதல் பேரவையின் கடமையாதல் வேண்டும்.

41 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை வெளியிடுதல்.

**42.** அதிகாரசபையானது, 41 ஆம் பிரிவின்கீழ் பேரவையினால் ஆக்கப்படும் கட்டளை எதனையும் தகுந்ததென அது கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் வெளியிடலாம்.

சாட்சிக்காரர்களுக்கு அறிவித்தல்கள் வழங்குவதற்கான தத்துவம்.

**43.** (1) பேரவையினால் நடாத்தப்படும் ஏதேனும் விசாரணை யில் அல்லது புலனாய்வில் சாட்சிக்காரர்களுக்கு அறிவித்தல் கள் வழங்கி அவர்களை விசாரணை செய்வதற்கு பேரவைக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் பேரவைச் செயலாளரின் கைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

Scanned with CamScanner

(2) அறிவித்தலானது, அதில் பெயர் குறிக்கப்பட்டிருக்கும் ஆளிடம் ஒப்படைக்கப்படுவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம் அல்லது அவ்வாறு சேர்ப்பிப்பது செயல்முறைக்கு உகந்த தல்லாததாக இருந்தால், அவ்வாள் கடைசியாக வசித்ததாக அறியப்படும் இடத்தில் அதனை விட்டு வைப்பதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(3) எவ்வாளிடம் அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ, அவ்வாள் ஒவ்வொருவரும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்திலும், இடத்திலும் பேரவை முன் வருகை தருதல் வேண்டும் என்பதுடன், அறிவித்தலின் தாற்பரியத்துக்கிணங்க, அவர் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய சாட்சியத்தை அளித்தலும் வேண்டும் அல்லது தேவைப்படுத்தப்பட்டவாறான அல்லது அவரின் உடைமையில் அல்லது தத்துவத்தில் இருக்கக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களை, பதிவேடுகளை அல்லது வேறு பொருளை காண்பித்தலும் வேண்டும்.

**44.** (1) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் விசாரணையின் அல்லது புலனாய்வின் நோக்கத்துக்காக, பேரவை — சான்று.

(அ) எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான அத்தகைய எல்லாச் சான்றையும் பெறுவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் அத்துடன் பெறுவதற்கு, பெற்றுக் கொள்வதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதென அது கருதக்கூடியவாறான அத்தகைய எல்லா ஆட்களையும் விசாரணை செய்வதற்கும்; அத்துடன்

(ஆ) எழுத்தில் இருந்தாலென்ன அல்லது வாய்மொழி மூலமாக இருந்தாலென்ன, எவரேனும் சாட்சிக்காரரின் சாட்சியம், சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது அளிக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்துவதற்கும் (அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரை, சாட்சிக்காரர் ஒருவர் நீதிமன்றம் ஒன்றில் சாட்சியம் அளிப்பதாக இருப்பின் அவரிடமிருந்து தேவைப்படுத்தப்பட்டாற் போன்ற அத்தகையதாக இருத்தல் வேண்டும்) அத்துடன் அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் சத்தியம் ஒன்றை அல்லது உறுதியுரை ஒன்றை எடுத்தோதுவிப்பதற்கும்,

தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

Scanned with CamScanner

(2) இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கைகளை நடாத்துகையில், பேரவை, சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றினாலும் பிணிக்கப்பட்டதாதலாகாது.

வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அல்லது சாட்சியம் முதலியன அளிப்பதற்குத் தவறுதல்.

**45.** நாற்பத்திமூன்றாம் பிரிவின்கீழ் எவ்வாளிடம் அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ, அவ்வாள் எவரும் —

(அ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்திலும், இடத்திலும், பேரவையின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள காரணமின்றி பேரவைமுன் தோன்றுவதற்குத் தவறினால் ;

(ஆ) சத்தியம் செய்வதற்கு அல்லது உறுதியுரை செய்வதற்கு மறுத்தால் அல்லது முறையாக சத்தியம் செய்விக்கப்பட்ட பின்னர் அல்லது உறுதியுரை செய்விக்கப்பட்ட பின்னர் பேரவையால் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக அவரிடம் கேட்கப்படும் ஏதேனும் வினாவுக்கு விடையளிப்பதற்கு, பேரவையின் அபிப்பிராயப்படி நியாயமானதாக உள்ள காரணமின்றி, மறுத்தால் அல்லது தவறினால் ; அல்லது

(இ) பேரவையினால் விசாரணை அல்லது புலனாய்வு செய்யப்பட இருக்கும் விடயங்கள் பற்றிய உண்மைத் தன்மை பற்றித் தெரிந்துகொள்வதற்கு அவசியமானதாக உள்ளதென பேரவை அபிப்பிராயம் கொண்டுள்ளதும், அவரது உடைமையில் அல்லது தத்துவத்தில் உள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைப் பேரவைக்குக் காண்பிப்பதற்கு பேரவையின் அபிப்பிராயப்படி, நியாயமானதாக உள்ள காரணமின்றி, மறுத்தால் அல்லது தவறினால்,

அத்தகைய ஆள், பேரவையின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அவமதிப்புத் தவறுக்கான தண்டனை.

**46.** (1) நாற்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செய்யப்படும் செயல் எதுவும் அல்லது விட்டுவிடுகை எதுவும், அத்தகைய செயல் அல்லது விட்டுவிடுகையானது மேன்முறை

Scanned with CamScanner

மீட்டு நீதிமன்றம் தொடர்பில் செய்யப்பட்டு அல்லது செய்யாது விடப்பட்டு அது, அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த அவமதிப்புத் தவறொன்றுக்காக அமையுமாயின், பேரவையின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த தவறொன்றாக அமைதல் வேண்டும்.

(2) பேரவையானது, ஆளொருவர் அதன் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதன் அதிகாரத்தை அவமரியாதை செய்த அவமதிப்புத் தவறொன்றைப் புரிந்திருக்கிறார் எனத் தீர்மானிக்கின்றவிடத்து, பேரவை அதன் தலைவரை அத்தகைய தீர்மானத்தை எடுத்துக்கூறும் சான்றிதழ் ஒன்றை மேன்முறை மீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பச் செய்வித்தல் வேண்டும். அத்தகைய சான்றிதழ் ஒவ்வொன்றும், பேரவையின் தலைவரால் ஒப்பமிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நீதிநெறிக் கவனத்துக்கு உட்படுத்துவதற்குத் தகுந்ததென மேன்முறைமீட்டு நீதிமன்றம் கருதக்கூடிய அவமதிப்புத் தவறொன்றுக்கான தண்டனைக்கான வழக்கு நடவடிக்கை எதிலும் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் ஒப்பமிடப்பட்டு அத்தகைய நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சான்றிதழொன்று எனக் கொள்ளப்படும் ஆவணம் எதுவும் —

(அ) சான்றாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கு முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, மேலதிக எண்பிப்பு இல்லாமல், அத்தகைய சான்றிதழொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சான்றிதழில் தரப்பட்டுள்ள தீர்மானம், தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளின் மீது பேரவையினால் செய்யப்பட்டது என்பதற்குச் சான்றாதல் வேண்டும்.

(4) பேரவையை அவமதித்ததெனச் சார்த்தப்பட்ட தவறெதற்குமான அல்லது பேரவையை அவமரியாதை செய்ததெனச் சார்த்தப்பட்ட தவறெதற்குமான தண்டனைக்காக இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு எடுக்கப்படும் ஏதேனும்



Scanned with CamScanner

வழக்கு நடவடிக்கையில், பேரவையின் உறுப்பினர் எவரும், சாட்சிக்காரர் ஒருவராகக் கட்டளையிட்டு அழைக்கப்படலாம் அல்லது விசாரணை செய்யப்படலாம் ; அத்துடன் அத்தகைய வழக்கு நடவடிக்கை எதுவும் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் சான்றிதழ் கிடைக்கப் பெற்றதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விசாரிக்கப்பட்டுக் கையுதிர்க்கப்படல் வேண்டும்.

*சாட்சிக்காரர்களுக்கு உள்ள சிறப்பு உரிமைகள்.*

**47.** பேரவைமுன் சாட்சியம் அளிக்கும் ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய சாட்சியம் தொடர்பில், நீதிமன்றம் ஒன்றன்முன் சாட்சியம் அளிக்கும் சாட்சிக்காரர் ஒருவர், அத்தகைய நீதிமன்றத்துக்குமுன் அவரால் அளிக்கப்படும் சாட்சியம் தொடர்பில் எச்சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராவாரோ, அச்சிறப்புரிமைகள் எல்லாவற்றுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

*பேரவை நடவடிக்கை முறையை விதித்தல்.*

**48.** பேரவையானது, அத்தகைய பேரவையினால் விசாரணை ஒன்று நடாத்தப்படுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையைத் தீர்மானிக்கலாம்.

## பாகம் V

### அதிகாரசபையின் நிதியம்

*அதிகாரசபையின் நிதியம்.*

**49.** (1) அதிகாரசபையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அதிகாரசபையின் நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :–

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் ஒதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) அதிகாரசபையானது, அதன் பணிகளைப் புரிவதில் அதிகாரசபையினால் கட்டணங்களாகவும் வேறுவகையாகவும் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

Scanned with CamScanner

(இ) இச்சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்ட எவை யேனும் பண்டங்களின் விற்பனையில் இருந்து கிடைக்கும் வரும்படிகள் ;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்தமைக் காக விதிக்கப்பட்ட ஒவ்வொரு குற்றப்பணத்தினதும் மூன்றிலொன்று ;

(உ) மானியம் அல்லது நன்கொடை என்றவகையில் அதற்குக் கிடைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஊ) ஐம்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் அல்லது 73 ஆம் பிரிவின்கீழ் நிதியத்துக்குக் கைமாற்றப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் அத்துடன் பேரவையின் உறுப் பினர்களுக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியம்;

(ஆ) பாவனையாளர், ஒழுங்கமைப்புகளின் மேம் பாட்டுக்கு, உதவிக்கு மற்றும் ஊக்குவிப்புக்கு அத்துடன் அத்தகைய ஒழுங்கமைப்புகளினது நிருவாகத்துக்கும் அபிவிருத்திக்கும் அவசியமானவை என அதிகாரசபை கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் ;

(இ) பாவனையாளர் கல்விக்கும் அது தொடர்பான தகவல் பரப்புவதற்கும், அத்துடன் அத்தகைய கல்வியை முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பான அதன் இடைநேர்விளைவான ஏதேனும் நோக்கத் திற்கு அவசியமானவையென அதிகாரசபை கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும், பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும், புரிகையிலும் அதிகார

Scanned with CamScanner

சபையினாலும் பேரவையினாலும் உறப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

50. (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்குப் புத்தகங்களை அதிகாரசபை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக் காய்வு தொடர்பில், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஆம் பாகத்தின் ஏற்புடைமை.

51. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VI

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.

52. (1) அதிகாரசபையானது, அமைச்சரின் எழுத்திலான அதிகாரத்துடன், அதிகாரசபைக்குப் பணிப்பாளர் தலைமை யதிபதி ஒருவரை நியமிக்கலாம். (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்).

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அதிகாரசபையின் பிரதான நிறை வேற்று அலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர் எல்லா நேரங்களிலும் "அதிகாரசபையின் பணிப்பின்கீழ் செயலாற்றலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்கான கடமைகளைப் புரிய இயலாதிருக்கும் போதிலெல்லாம், அதிகாரசபை, அமைச்சரின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அத்தகைய வராமையின்போது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

அதிகாரசபைக்கு அலுவலர்கள் சேவையாளர்கள் மற்றும் ஆலோசகர்களை நியமித்தல்.

**53.** அதிகாரசபையினதும் பேரவையினதும் வேலையைப் புரிவதற்கு அவசியமானவர்களாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பணிப்பாளர்களையும் பிரதிப் பணிப்பாளர்களையும் உதவிப் பணிப்பாளர்களையும் ஏனைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் மற்றும் ஆலோசகர்களையும் அதிகாரசபை நியமிக்கலாம் என்பதுடன் அவர்களுக்கு அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியம் வழங்கப்படுதலும் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களை அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

**54.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும், பொதுநிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

Scanned with CamScanner

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிய உடன்பட்டுக்கொண்ட ஆளெவரையும் அதிகாரசபை ஊழியத்தில் அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால், அதிகாரசபைக்குப் புரியப்பட்ட சேவைக்காலப் பகுதியானது, அத்தகைய உடன்படிக்கையின் கீழான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அவ்வாளினால் அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

### பொது

எச்சரிக்கைகளை அனுப்புவதற்கு அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

55. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக உள்ளது எது எப்படி இருப்பினும், அதிகாரசபை, அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்தியபின்னர், ஆள் எவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் மீறியிருக்கிறார் என அல்லது அதன்கீழ் விடுக்கப்பட்ட எதேனும் பணிப்பை மீறியிருக்கிறார் எனத் திருப்திப்பட்டால், முதலாவது மீறுகையின் விடயத்தில் அத்தகைய ஆளுக்கு எழுத்திலான எச்சரிக்கையொன்றை அனுப்பலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் விடுக்கப்படும் எச்சரிக்கையொன்றானது, அதிகாரசபையினால் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பதிவேடுகள் பேணப்படுதல் மற்றும் விபரத்திரட்டுகள் கொடுத்துதவப்படுதல் ஆகியவற்றைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவம்.

56. (1) அதிகாரசபை, இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகள் தகுந்த முறையில் நிறைவேற்றப்படுவதற்காக –

(அ) இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானவையென அதிகாரசபை கருதக்கூடியவாறான அத்தகைய விடயங்கள் தொடர்பில், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பதிவேடுகளைப் பேணுமாறு ; அத்துடன்

Scanned with CamScanner

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அதிகாரசபை கருதக்கூடியவாறான அத்தகைய விடயங்கள் தொடர்பில், அதிகாரசபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளிலும் அத்தகைய படிவத்திலும் விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுமாறும்.

எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் உற்பத்தியாளர்களை, இறக்குமதியாளர்களை, விநியோகத்தர்களை அத்துடன் ஏற்றுமதியாளர்களைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராமுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பதிவேடுகளைப் பேணுமாறு தேவைப்படுத்தப்பட்ட சகல உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும், விநியோகத்தர்களும், ஏற்றுமதியாளர்களும் அவ்வாறு பேணப்பட்ட பதிவேடுகளை ஆறு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு பாதுகாத்து வைத்திருப்பது அவர்களுக்குள்ள கடமையாதல் வேண்டும்.

தகவல் தருமாறு கேட்பதற்கு அதிகார சபைக்குள்ள

**57.** (1) அதிகாரசபை அல்லது அதற்கென அதிகாரசபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும், எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள், இச்சட்டத்தின்கீழ், அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அதிகாரசபை கருதக்கூடியவாறானதும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறானதுமான அத்தகைய ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தை காண்பிக்குமாறு ஆளெவரையும் தேவைப்படுத்தலாம், அத்துடன் அத்தகைய அறிவித்தலைப் பெற்றுக்கொள்ளும் எவரேனும் ஆள், அத்தகைய தகவலை வெளியிடுதலில் இருந்து அல்லது அத்தகைய ஆவணத்தை காண்பிப்பதில் இருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்யக் கூடிய எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கி யொழுகுவது அவரது கடமையாதல் வேண்டும் :

Scanned with CamScanner

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவிலுள்ளதெதுவும், ஏதேனும் தகவல் வெளிக்காட்டப்படுதலானது அல்லது ஏதேனும் ஆவணம் காண்பிக்கப்படுதலானது ஏதேனும் வரிசுமத்தப்படுவதற்கும் அல்லது அறவிடப்படுவதற்கும் ஏற்பாடு செய்கின்ற ஏதேனும் சட்டத்தின் எவ்வேற்பாட்டினாலும் தடைசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்குமாறு அறிவித்தல்மூலம் எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துவதற்கு அதிகாரசபையை அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளை இயலச்செய்வதாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(2) ஐம்பத்தாறாம் பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஒரு விபரத்திரட்டில் அடங்கியுள்ள தகவலெதுவும் அத்துடன் இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் நியதிகளுக் கிணங்கக் கொடுத்துதவப்பட்ட தகவலெதுவும் அல்லது காண்பிக்கப்பட்ட ஆவணமொன்றின் உள்ளீடுகள், விடயத்துக் கேற்ப அத்தகைய விபரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுகின்ற, அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிக்கின்ற ஆளின் சம்மதத்துடன் அன்றி, அல்லது அதிகாரசபையின் பணிகளை அது நிறைவேற்றுகையில் அன்றி, அதிகாரசபையினால் வேறெவரேனுமாளுக்கு வெளியிடப்படுதலோ அல்லது தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

பிரவேசிப்பதற்கும் சோதனையிடுவதற்கும், தேடுகையிடுவதற்குமான தத்துவம்.

**58.** (1) அதிகாரசபை அல்லது அதிகாரசபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக நியாயமான ஏதுக்களின்மீதும் தேவைப்பட்டால் அவரது சான்றாவணங்களைக் காண்பித்ததன்மீதும் —

(அ) நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது வியாபாரி தனது தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற வளவுகளினுள் அல்லது விற்பனைக்காக எவையேனும் பண்டங்கள் களஞ்சியப்படுத்தப்படும் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படும் வேறு எவையேனும் வளவுகளினுள் பிரவேசிப்பதற்கும், அவற்றைச் சோதனையிடுவதற்கும் தேடுகையிடுவதற்கும் ;

Scanned with CamScanner

(ஆ) பதினாறாம் அல்லது 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அத்தகைய வளவுகளில் காணப்படும் எவையேனும் பண்டங்களைக் கைப்பற்றுவதற்கும், தடுத்துவைப்பதற்கும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தொழில் தொடர்பிலான வேறேதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகளைச் சோதனையிடுவதற்கும் அவற்றின் பிரதிகளை எடுப்பதற்கும்,

தத்துவம் கொண்டதாதல் அல்லது கொண்டவராதல் வேண்டும் ;

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கைப்பற்றப்பட்டுத் தடுத்துவைக்கப்படும் எவையேனும் பண்டங்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய உற்பத்தியாளரை அல்லது வியாபாரியைக் குற்றத்தீர்ப்பளித்ததன் மேல் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான முறையாகப் பறிமுதல் செய்யப்பட்டு விற்றுத் தீர்க்கப்பட்டு அதன்மூலம் பெறப்படும் பணம் அதிகார சபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

59. (1) ஐம்பத்தெட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கைப்பற்றப்பட்டுத் தடுத்து வைக்கப்படும் எவையேனும் பண்டங்கள் அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அழிந்து போகக்கூடிய அத்தகைய தன்மையினவாக இருந்து அவற்றை உடனடியாக விற்பனை செய்வது அவசியமானதாக அல்லது புத்திசாலித்தனமானதாக இருக்கின்றவிடத்து, அதிகார சபையானது இலங்கையில் விற்பனையாகும் ஒரு சிங்கள, தமிழ் அத்துடன் ஆங்கிலச் செய்தித்தாளிலான விளம்பரத்தின் மூலம் விற்பனை பற்றி மூன்று நாட்களுக்குக் குறையாத அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும் ; அத்துடன் அதன் பின்னர் அத்தகைய பண்டங்களை விற்பனை செய்வித்தல் வேண்டும். அழிந்து போகக் கூடிய பண்டங்களின் விற்பனை.

(2) எவையேனும் பண்டங்களின் (1) ஆம் உட்பிரிவின் கீழான விற்பனை வரும்படிகள் அதிகாரசபையினால் அந்நோக்கத்துக்காகப் பேணப்படும் சிறப்புக் கணக்கொன்றில் வரவுவைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் எந்த ஆளிடமிருந்து பண்டங்கள் கைப்பற்றப்பட்டனவோ அந்த ஆள் நீதிமன்றத்தினால் பின்னர் விடுதலை செய்யப்பட்டவிடத்து அல்லது விடுவிக்கப்பட்டவிடத்து அப்பண்டங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தொகை அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

Scanned with CamScanner

(3) நீதிமன்றம் எவ்வாளிடமிருந்து பண்டங்கள் கைப்பற்றப் பட்டனவோ அவ்வாளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கின்றவிடத்து, அத்தகைய பண்டங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்டு (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புக் கணக்கின் வரவில் இருக்கும் பணம் அதிகாரசபையின் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

60. (1) (அ) (i) ஐம்பத்தாறாம் பிரிவின்கீழ் ஒரு விபரத் திரட்டைக் கொடுத்துதவும்படி அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்யாது விடுகின்ற அல்லது செய்ய மறுக்கின்ற ; அல்லது

(ii) ஐம்பத்தாறாம் பிரிவின்கீழ் அனுப்பப் படும் ஓர் அறிவித்தல் மூலம் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு செய்யாது விடுகின்ற அல்லது செய்ய மறுக்கின்ற.

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அவரினால் கொடுத்துதவப் பட்ட ஏதேனும் பொய்யான கூற்றை அறிந்து கொண்டே அளிக்கின்ற அல்லது ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படும்போது ஏதேனும் பொய்யான தகவலை அறிந்து கொண்டே கொடுத்துதவுகின்ற ; அல்லது

(இ) ஐம்பத்தெட்டாம் பிரிவின்கீழ் தமது தத்து வங்களைப் பிரயோகிக்கையில் செயலாற்று கின்ற எவரேனும் அலுவலரைத் தடங்கல் செய்கின்ற.

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவா னொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் —

Scanned with CamScanner

(i) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவிராதவிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப் பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத இரண்டிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றின் விடயத்தில் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத இரண்டிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ; அல்லது,

(ii) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப் பணத்துக்கும், அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றன் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கும்,

ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) நாற்பத்தோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) என்பதன் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது அத்தகைய கட்டளைக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்,

(i) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிராதவிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும், அத்துடன் அடுத்துப் பின்வரான தவறொன்றன் விடயத்தில், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ; அல்லது

(ii) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு, அத்துடன் அடுத்துப் பின்வரான தவறொன்றன் விடயத்தில் ஓர் இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் இருபது இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு,

ஆளாதலும் வேண்டும்.

(ஆ) நீதிமன்றமானது, மேலதிகமாக, 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் எந்தச் செயற்பாடுகள் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்தச் செயற்பாடுகளை அத்தகைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய

Scanned with CamScanner

காலப்பகுதிக்கு அல்லது அப்பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கு அத்தகைய ஆள் இணங்கியொழுகும் வரை கொண்டு நடாத்துதைத் தவிர்க்கும்படி அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம்.

(3) பதினைந்தாம் பிரிவு அல்லது 16ஆம் பிரிவு அல்லது 17 ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் மீறுகை காரணமாக இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவான் ஒருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் —

(அ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிராதவிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இரண்டிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் அத்துடன் அடுத்துப் பின்வரான தவறொன்றின் விடயத்தில் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு இரண்டிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றின் விடயத்தில் ஓர் இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு இலட்சம்

ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பண மொன்றுக்கு.

ஆளாதல் வேண்டும்.

(4) பிரிவு 18 என்பதன் ஏற்பாடுகளின் மீறுகை காரணமாக இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள் நீதிவான் ஒருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் —

(அ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிராதவிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலமொன்றுக்கான இரண்டிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றன் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலமொன்றுக்கான இரண்டிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும்; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றன் விடயத்தில் ஓர் இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் இருபது இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு,

ஆளாதல் வேண்டும்.

Scanned with CamScanner

(5) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு அல்லது (இப்பிரிவின் (1), (2), (3) அத்துடன் (4) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த) ஏதேனும் அத்தகைய ஏற்பாட்டின்கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் தேவைப்பாடுகளுக்கு அல்லது 72 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் –

(அ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிராதவிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இரண்டிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும், அடுத்துப் பின்னரான தவறொன்றன் விடயத்தில் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இரண்டிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, முதலாவது தவறொன்றன் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணம் ஒன்றுக்கு, அத்துடன் அடுத்துப் பின்னரான தவறொன்றன் விடயத்தில் இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ;

ஆளாதலும் வேண்டும்.

Scanned with CamScanner

(6) இச்சட்டத்தின்கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எல்லா ஆட்களினதும் பெயர்களையும் முகவரியையும் அதிகாரசபை அது தகுதியெனக் கருதுகின்ற அத்தகைய முறையில் வெளியிடுதல் அல்லது வெளியிடுவித்தல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது –

(அ) ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும் ; அத்துடன்

(ஆ) ஆட்கள் குழுவானது குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியெனக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது பங்காளர் எவரும், அத்தவறு அவரது அறிவின்றிப் புரியப்பட்டதென்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் உரிய சகல விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தாரென்று எண்பித்தால், அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காக மாதிரிகளைப் பெறுதல்.

**61.** (1) அதிகாரசபையானது, விற்கப்படும் எவையேனும் பண்டங்கள் இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இசைந்தொழுகவில்லையென நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்குமிடத்து, அது –

(அ) (i) அத்தகைய பண்டங்களின் உற்பத்தியாளரொருவர் அல்லது வியாபாரியொருவர் அவரது தொழிலை எந்த வளவுகளில் கொண்டுநடாத்துகின்றாரோ அந்த வளவுகளிலிருந்து ;

(ii) அத்தகைய எவையேனும் பண்டங்கள் எந்த வளவுகளில் களஞ்சியப்படுத்தப்படுகின்றதோ அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படுகிறதோ அந்த வளவுகளிலிருந்து ; அல்லது

(iii) அத்தகைய பண்டங்கள் எந்த வாகனத்தில் இடம்பெயர்க்கப்படுகின்றனவோ அந்த வாகனத்திலிருந்து,

அத்தகைய பண்டங்களின் மாதிரியொன்றைப் பெறும்படி எழுத்தில் அலுவலரொருவருக்கு அதிகாரமளிக்கலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய மாதிரி எந்த உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் உடைமையிலிருந்து பெறப்பட்டதோ அந்த உற்பத்தியாளருக்கு அல்லது வியாபாரிக்கு, பணிப்புரையொன்றில் குறித்துரைக்கப்படவேண்டிய காலப்பகுதியொன்றுக்குச் சம்பந்தப்பட்ட பண்டங்களை விற்காது அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்காது தவிர்க்குமாறு அத்தகைய ஒரு பணிப்புரையை வழங்கலாம் ; எவ்வாறாயினும், அத்தகைய காலப்பகுதி அத்தகைய பணிப்புரை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு வாரங்களைக்கொண்ட காலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது.

(2) மாதிரியைப் பெற்ற அலுவலர் 12 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட நியமங்களுக்கும் அளவுக்குறிப்பீடுகளுக்கும் அத்தகைய பண்டங்கள் இசைந்தொழுகுகின்றனவாவென்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளருக்கு அதனை உடனடியாகச் சமர்ப்பித்தல் அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளர், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிர, அம்மாதிரி கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றினுள் அதிகாரசபைக்குத் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம்.

(3) அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளரின் அறிக்கையைப் பெற்றதன்மேல் அதிகாரசபையானது –

(அ) சம்பந்தப்பட்ட பொருள் 12 ஆம் பிரிவில் விதிக்கப்பட்ட நியமங்களுக்கும் அளவுக்குறிப்பீடு

களுக்கும் இசைந்தொழுகுகின்றது என அது வெளிக் காட்டுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையினால் சுமத்தப்பட்ட மட்டுப்பாட்டை உடனடியாக அகற்றுதல் வேண்டும் ; அல்லது.

(ஆ) பண்டங்களானவை இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட நியமங்களுக்கும் அளவுக்குறிப்பீடு களுக்கும் இசைந்தொழுகவில்லையெனவும் அந்த இசைந்தொழுகாமை, சம்பந்தப்பட்ட பண்டங்கள் எவ்வித பயன்பாட்டுக்கும் அல்லது பாவனைக்கும் தகுதியற்றதாக்கப்பட்டதனை விளைவித்துள்ளதென வும் அது வெளிக்காட்டுமிடத்து, விடயத்துக்கேற்ப அத்தகைய பண்டங்களை அல்லது பண்டங்களின் அனுப்பு தொகையைக் கைப்பற்றித் தடுத்துவைத்தல் வேண்டும்.

(4) விடயத்துக்கேற்ப எவையேனும் பண்டங்கள் அல்லது பண்டங்களின் அனுப்புதொகை (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கைப்பற்றப்பட்டுத் தடுத்துவைக்கப்படு மிடத்து, விடயத்துக்கேற்ப உற்பத்தியாளர் அல்லது வியாபாரி இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்குத் தொடுப்பில், பண்டங்களின் எந்த ஆக்கக்கூறுகள் அல்லது சேர்க்கை தொடர்பாகத் தவறானது புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்டுள்ளதோ அந்த ஆக்கக்கூறுகளை அல்லது சேர்க்கையைக் குறிப்பிட்டு இப்பிரிவின் நோக்கத்துக்காக எவையேனும் பண்டங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு பணிப் பாளர் தலைமையதிபினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று சான்றாக ஏற்றுக் கொள்ளப்படற்பாலதும் அதன்கண் அளிக்கப்பட்ட கூற்றுக்களின் முதற்றோற்றவளவிலான எண்பிப் பாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக்குத் தொடுப்பொன்று, பணிப்பாளர் தலைமையதிபின் எழுத்தி லான அனுமதியினால் அல்லது அனுமதியுடன் அன்றித் தொடுக்கப்படலாகாது.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளர்" என்பது அத்தகைய பணியைப் புரிவதற்குத்

Scanned with CamScanner

தகைமைவாய்ந்தவரும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவருமான ஆளொருவர் எனப் பொருளாகும்.

62. (1) அறுபத்தோராம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றத்தீர்ப்பில், நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இசைந்தொழுகாமையானது பண்டங்களை அல்லது பண்டங்களின் அனுப்புதொகையைப் பயன்பாட்டுக்கு அல்லது பாவனைக்குத் தகுதியற்றவையாக்கியுள்ளதென எண்பிக்குமிடத்து, அப்போது— பொருட். இழப்பித்தல்.

(அ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மாகாணத்தின் மேல்நீதிமன்றத்துக்கு இயைபான குற்றத்தீர்ப்புக்கெதிராக அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள்ளாக மேன்முறையீடெதுவும் செய்யப்பட்டிராவிடில் ; அல்லது

(ஆ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மாகாணத்தின் மேல் நீதிமன்றத்துக்கு இயைபான குற்றத்தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்து குற்றத்தீர்ப்பானது உறுதிப்படுத்தப்பட்டிருப்பின்,

நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அழிக்கப்படுதற்கென அத்தகைய பண்டங்கள் அல்லது பண்டங்களின் அனுப்புதொகை அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான வழக்கொன்றில் நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் இசைந்தொழுகாமை, பண்டங்களை அல்லது பண்டங்களின் அனுப்புதொகையை ஏதேனும் பயன்பாட்டுக்கு அல்லது பாவனைக்கு தகுதியற்றதாகியுள்ளதென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக்கப்படவில்லையென்ற காரணத்துக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்படுமிடத்து, அப்போது —

(அ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மாகாணத்தின் மேல்நீதிமன்றத்துக்கு இயைபான விடுதலைக்கெதிராக அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்துக்குள்ளாக மேன்முறையீடெதுவும் செய்யப்பட்டிராவிடில் ; அல்லது

Scanned with CamScanner

(ஆ) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மாகாணத்தின் மேல்நீதிமன்றத்துக்கு இயைபான விடுதலைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருந்து, விடுதலையானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின்,

நீதிமன்றமானது கைப்பற்றப்பட்ட பண்டங்களை அல்லது பண்டங்களின் அனுப்புதொகையை விடுவிக்கும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

61 ஆம் பிரிவின் கீழான வழக்குகளுக்கு முதன்மை கொடுத்தல் வேண்டும்.

**63.** நீதிமன்றம் ஒவ்வொன்றும், அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் 61 ஆம் பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கைக் கையாளுவதற்கும், ஏதேனும் குற்றத்தீர்ப்புக்காக விதிக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக அத்தகைய குற்றத்தீர்ப்புக்கெதிரான ஏதேனும் மேன்முறையீட்டின் கேட்புக்கும் முதன்மை கொடுத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

**64.** குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும்—

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட எச்செயலுக்காகவும் அதிகாரசபைக்கெதிராக, அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வியாபாரத்துக்கேற்றாற்போல அதிகாரசபையின் அல்லது பேரவையின் பணிப்புகளின்கீழ் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, பணிப்பாளருக்கு, பிரதிப் பணிப்பாளருக்கு, உதவிப் பணிப்பாளருக்கு அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது ஆலோசகருக்கு அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு எதிராக,

தொடுக்கப்படுதலாகாது.

செலவுகள் நிதியத்திலிருந்து கொடுக்கப்படுதல்.

**65.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகார

Scanned with CamScanner

சபையினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்; அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதிகார சபையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவு தொகைகள் அதிகாரசபையின் நிதியத்துள் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினரால், பணிப்பாளர் தலைமையதிபதியால், பணிப்பாளரால், பிரதிப் பணிப்பாளரால், உதவிப் பணிப்பாளரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது ஆலோசகரால் அல்லது பேரவையின் எவரேனும் உறுப்பினரால் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் அல்லது பேரவையின் பணிப்புகளின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப் பட்ட அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்டதென நீதிமன்றம் முடிவுசெய் தால், அத்தகைய செலவுகள் அத்தகைய தொடர்ச்சியில் அல் லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய, அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையினதும் பேரவையினதும் உறுப்பினர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**66.** அதிகாரசபையினதும் பேரவையினதும் எல்லா உறுப்பினர்களும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணிப்பாளர்களும், பிரதிப் பணிப்பாளர்களும், உதவிப் பணிப்பாளர்களும் அலுவலர்களும், சேவையாளர்களும், ஆலோசகர்களும் —

(அ) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட் படவும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடரும் நோக்கத்துக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட்ட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

Scanned with CamScanner

இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபையும் பேரவையும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**67.** இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபையும் பேரவையும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

முகவர்களினதும் சேவையாளர்களினதும் தவறுகளுக்காக முதல்வர் ஆளாதல் வேண்டும்.

**68.** இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு எவரேனும் உற்பத்தியாளரின் அல்லது வியாபாரியின் முகவரொருவரினால் அல்லது சேவையாளரினால் புரியப்பட்டவிடத்து, அத்தகைய தவறு அத்தகைய உற்பத்தியாளரது அல்லது வியாபாரியினது, அறிவில்லாமல் புரியப்பட்டதென அவர் எண்பித்தாலொழிய, அத்தகைய தவறு அவரால் புரியப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்தசில ஆட்களுக்கான வெகுமதிகள்.

**69.** எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து அல்லது எவையேனும் பண்டங்கள் இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்டு இழப்பிக்கப்படவேண்டுமெனக் கட்டளையாக்கப்படுமிடத்து, அதிகாரசபையானது —

(அ) அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு அல்லது அத்தகைய பண்டங்களின் இழப்பித்தலுக்கும் இட்டுச்சென்ற தகவலை அளித்த ஆளுக்கு ; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறைக் கண்டுபிடிப்பதில் அல்லது அத்தகைய பண்டங்களின் கைப்பற்றுகையையும் இழப்பித்தலையும் பயனுறுத்துவதில் சம்பந்தப்பட்ட எவரேனுமாளுக்கு,

அது நியாயமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை வெகுமதியாகச் செலுத்தலாம்.

தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாதல்.

**70.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின்கீழான ஒவ்வொரு தவறும், அச்சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளாகவும் அச்சட்டக்கோவையின் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தகு தவறாகக் கருதப்படுதல் வேண்டும்.

Scanned with CamScanner

71. அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள் என்போர் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் சமாதான அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, அச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாக சமாதான அலுவலர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்தசில அலுவலர்கள் சமாதான அலுவலர்கள் ஆயிருத்தல்.

72. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எக்கருமம் தொடர்பிலும் அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எக்கருமம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) அதிகாரசபையின் கூட்டங்கள் எம்முறையில் கூட்டப்படவேண்டுமோ அம்முறையை விதித்துரைத்தல் ;

(ஆ) அதிகாரசபையின் கூட்டங்கள் நடாத்தப்படவேண்டிய முறையை விதித்துரைத்தல் ;

(இ) அதிகாரசபையினாலும் பேரவையினாலும் நடாத்தப்படும் விசாரணைகளுக்கும் புலனாய்வுகளுக்கும் வருகைதரும்படி அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்ட சாட்சிக்காரர்களுக்கான செலவுகள் எவ்வாட்களினாலும் எம்முறையிலும் செலுத்தப்பட வேண்டுமென விதித்துரைத்தல்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

Scanned with CamScanner

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம், (173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச்சட்டம் என்பவற்றை நீக்குதலும் அத்துடன் பேணல்களும்.

**73.** (1) (அ) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

(ஆ) மேற்கூறப்பட்ட சட்டம் நீக்கப்பட்டமை எப்படியிருப்பினும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவில் இருந்ததான –

(i)(அஅ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் 3 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட ஒவ்வொரு பகிர்ந்தளிப்புத் திட்டமும் ;

(ஆஆ) நீக்கப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் உள்நாட்டு வியாபார ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு பொதுப் பணிப்பும் ;

(இஇ) நீக்கப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் உள்நாட்டு வியாபார ஆணையாளரினால் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு நியமமும் அளவுக் குறிப்பீடும் ; அத்துடன்

(ஈஈ) நீக்கப்பட்ட சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் உள்நாட்டு வியாபார

Scanned with CamScanner

ஆணையாளரினால் எவரேனும் உற்பத்தியாளருடன், வியாபாரியுடன் அல்லது உற்பத்தியாளர்களைக் கொண்ட ஏதேனும் கழகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒவ்வோர் எழுத்திலான உடன்படிக்கையும்,

அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட திட்டமாகவும் வழங்கப்பட்ட பணிப்புரையாகவும் தீர்மானிக்கப்பட்ட நியமமாகவும் அளவுக்குறிப்பீடாகவும், செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(ii) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின் 33அ என்னும் பிரிவின்கீழ் பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்தின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு அத்தேதியிலிருந்து கைமாற்றப்பட்டதாதல் வேண்டும்;

(iii) நீக்கப்பட்ட சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ளதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராததுமான ஒவ்வோர் ஒழுங்குவிதியும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் அதற்கிணங்க திருத்தப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்;

(iv) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அலுவலகமுறையான தன்மையில் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த

Scanned with CamScanner

பவராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அவரினால் அல்லது அவருக்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான தேதியன்று முடிவுறாதிருந்தவையுமான எல்லாத் தொடர்ச்சிகளும் குற்ற வழக்குத் தொடுப்புகளும், அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கெதிராகத் தொடுக்கப்பட்ட தொடர்ச்சிகளாகவும் குற்ற வழக்குத் தொடுப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டும் ;

(V) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அலுவலக முறையான தன்மையில் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவராக அவருக்குச் சாதகமாக அல்லது அவருக்கெதிராக ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் பதிவீடு செய்யப்பட்ட எல்லாத் தீர்வைகளும் ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும் அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதிவீடு செய்யப்பட்டவையாக அல்லது ஆக்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம் ;

(VI) உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தினால், அதனோடு அல்லது அதன் சார்பில் உறப்பட்ட எல்லாக் கடன்களும் கடப்பாடுகளும், சொத்துக்களும், பொறுப்புக்களும், செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்ட எல்லாக் காரியங்களும், கருமங்களும், அதிகாரசபையுடன் அல்லது அதன் சார்பில் உறப்பட்டதாகவும் செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

Scanned with CamScanner

(2) (அ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 1 ஆம் இலக்க. நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

(ஆ) மேற்கூறப்பட்ட சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறு இருப்பினும் —

(i) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் முன்னரான தேதியன்று நீக்கப்பட்ட சட்டத்தின் 30 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும் ;

(ii) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான தேதியன்று நியாய வியாபார ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள எல்லா விசாரணைகளும் புலனாய்வுகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையின் முன்னர் முடிவுறாதுள்ள விசாரணைகளாகவும் புலனாய்வுகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய அதிகாரசபையின் முன்னர் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவுறுத்தப்படுதலும் வேண்டும் ;

(iii) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முன்னரான தேதியன்று நீக்கப்பட்ட சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்ட எல்லா வேண்டுகோள்களும் இச்சட்டத்தின்கீழ் நியாயவியாபார ஆணைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவையும் அத்தகைய ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதிருப்பவையுமான எல்லாக் கேள்விகளும் இச்சட்டத்தின்கீழ் அதிகார

Scanned with CamScanner

சபைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களாகவும் ஆற்றுப்படுத்தப்பட்ட கேள்விகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையினால் அவை விசாரணை செய்யப்படுதலும் பரிசோதனை செய்யப்படுதலும் வேண்டும்;

(iv) நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியாய வியாபார ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும் சார்ப்பிக்கப்பட்ட எல்லா அறிக்கைகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட கட்டளைகளாகவும் சார்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(v) ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் நியாய வியாபார ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னரான திகதியன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லாத் தொடர்ச்சிகளும் குற்றவழக்குத் தொடுப்புகளும் அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட தொடர்ச்சிகளாகவும் குற்றவழக்குத் தொடுப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(vi) நியாய வியாபார ஆணைக்குழுவுக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராக ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் பதிவிடுசெய்யப்பட்ட எல்லாத் தீர்வைகளும் அல்லது ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும் விடயத்துக்கேற்ப அதிகாரசபைக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதிவிடு செய்யப்பட்டவையாக அல்லது ஆக்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தப்படலாம்;

Scanned with CamScanner

(vii) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், இச்சட்டம் தொடங்கும் திகதியன்று வலுவிலுள்ளதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராததுமான ஒவ்வோர் ஒழுங்குவிதியும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஓர் ஒழுங்குவிதியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் ;

(viii) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஆணைக்குழுவிலுள்ள எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் —

(அ) அதிகாரசபையின் அலுவலர்களுக்குத் தொழில் முனையப்பட்டு அத்தகைய முனைவை அவர்கள் ஏற்றுக்கொண்டால், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அவர்களுக்கு ஏற்புடையனவாகவிருந்த தொழில் நியதி நிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறைந்தனவாகவிராத அத்தகைய நியதி நிபந்தனைகளின் மேல் அதன்கண் தொழிலமர்த்தப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) அதிகாரசபையில் அவர்களுக்குத் தொழில் முனையப்படாவிட்டால் அல்லது அத்தகைய தொழில் முனையப்பட்டு அத்தகைய முனைவை அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நட்டஈட்டுக் கொடுப்பனவுக்கு உரித்துடையோராதல் வேண்டும் ; அத்துடன்

(ix) நியாய வியாபார ஆணைக்குழுவினால், அதனால் அல்லது அதற்காக உறப்பட்ட எல்லாக் கடன்களும், கடப்பாடுகளும், சொத்துக்களும் பொறுப்புக்களும், நிறைவேற்றப்பட்ட அல்லது செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், அத்துடன் செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள எல்லாக் கருமங்களும் காரியங்களும், அதிகார சபையினால் அல்லது அதிகாரசபைக்காக உறப்பட்டதாக, நிறைவேற்றப்பட்டதாக, செய்து கொள்ளப்பட்டதாக, அத்துடன் செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) (173 ஆம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

"விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்" பற்றிய குறிப்பீடு அதிகார சபையில் உள்ள இணையான அலுவலர் பற்றிய குறிப்பீடாதல் வேண்டும்.

**74.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் "விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் அதிகார சபையினால் பண்டங்களுக்கு விலைகுறித்தலை ஒழுங்குபடுத்துதல் தொடர்பிலான பணிகளைப் புரிதல் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரசபையின் இணையான அலுவலர் பற்றிய குறிப்பீடொன்றாக வாசிக்கப்படுதலும் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

பொருள் கோடல்.

**75.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"பாவனையாளர்" என்பது, ஏதேனும் உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியினால் பிரதிபலனுக்காகக் கிடைக்கச்செய்யப்படும் எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் உண்மையான அல்லது எதிர்காலப் பயன்படுத்துநர் என்று பொருளாகும்;

"பேரவை" என்பது, இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் பேரவை என்று பொருளாகும்;

Scanned with CamScanner

"எரிபொருள்" என்பது, வாயுக்கள், நிலக்கரி அல்லது உராய்வு நீக்கிகள் தவிர்ந்த, திரவ அல்லது வாயு வடிவத்திலான சகல பெற்றோலியப் பொருட்களையும் உள்ளடக்கும் ;

"பண்டங்கள்" என்பது, ஏதேனும் உணவு, பானம், மருந்தாக்கப்பொருள், எரிபொருள் மற்றெல்லா வணிகப்பொருள் என்று பொருளாகும் ;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை என்று பொருளாவதோடு ஏதேனும் அத்தகைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஒத்த அல்லது இவற்றுக்கு நேரொத்த தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"விலை" என்பது, ஏதேனும் விவரணத்தினதான ஓர் இறுப்பனவு என்று பொருளாகும் ;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபை ஒன்று என்று பொருளாகும் ;

"உற்பத்தியாளர்" என்பது—

(அ) பொருளொன்றை அல்லது எவையேனும் பண்டங்களை ஆக்குகின்ற ;

(ஆ) இரசாயன நடைமுறைமூலம் அல்லது வேறு வகையாக ஏதேனும் பொருளை அல்லது எவையேனும் பண்டங்களை கூட்டிச்சேர்க்கின்ற அல்லது ஒன்றிணைக்கின்ற ; அல்லது

Scanned with CamScanner

(இ) ஏதேனும் பொருளை அல்லது எவையேனும் பண்டங்களை விற்பனைக்கு இசைவாக்குகின்ற

எவரேனுமாள் என்று பொருளாகும் ;

"சேவை" என்பது, உண்மையான அல்லது எதிர்கால பயன்படுத்துநர்களுக்குக் கிடைக்கச்செய்யப்படும் எதேனும் விவரணத்தினதுமான சேவை என்று பொருளாவதோடு பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :—

(அ) வங்கித்தொழில், நிதிவழங்கல், காப்புறுதி, கப்பற்றொழில் மற்றும் களியாட்டம் ;

(ஆ) பண்டங்களின் நிர்மாணம், உற்பத்தி, தயாரிப்பு, வழங்கல், களஞ்சியப்படுத்தல், பேணுகை, பழுதுபார்ப்பு, பரிகரிப்பு, துப்பரவாக்கம், பதனிடல் அல்லது மாற்றம் செய்தல் ;

(இ) பண்டங்களின் இறக்குமதி, ஏற்றுமதி அல்லது விநியோகம் தொடர்பான சேவைகள் ;

(ஈ) பண்டங்களின் பணிகளினதும் காத்துகை ;

(உ) கட்டிடங்களையும் கட்டிட வளவுகளையும் துப்புரவாக்குதல் ;

(ஊ) மின்சாரம், நீர் வாயு மற்றும் தொலைச்செய்தி போக்குவரத்து உட்பட எவையேனும் பயன்பாட்டுச் சேவைகளின் விற்பனையும் வழங்குகையும் ;

(எ) தகவல் தொழில்நுட்ப மற்றும் செய்திப் போக்குவரத்து ஏற்பாடு ;

(ஏ) கணக்கியல், கணக்காய்வியல், சட்ட, மருத்துவ, உடல்நல, நில அளவை, கட்டடக்கலை மற்றும் எந்திரவியல் போன்ற உயர்தொழில் சேவைகள்.

"வியாபாரி" என்பது —

(அ) பண்டங்களை மொத்தமாகவோ, ஆட்களுக்கு விற்பனை செய்கின்ற அல்லது வழங்குகின்ற ;

(ஆ) சில்லறை வீதங்களில் பாவனையாளர்களுக்குப் பண்டங்களை விற்பனை செய்கின்ற அல்லது வழங்குகின்ற ;

(இ) விற்பனை அல்லது வழங்கல் நோக்கத்துக்காகப் பண்டங்களை இறக்குமதி செய்கின்ற;

(ஈ) பிரதிபயனுக்காகச் சேவைகளை ஏற்பாடு செய்கின்ற

எவரேனுமாள் என்று பொருளாகும்.

**ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

**76.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**இப்போதுள்ள உடன்படிக்கைகளை விலக்களித்தல்**

**77.** இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், போட்டி எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள், அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட இச்சட்டம் தொடங்கும் திகதியன்று வலுவிலிருக்கின்ற உடன்படிக்கையொன்றின்கீழ் அத்தகைய உடன்படிக்கை வலுவிருக்கும் வரை எவையேனும் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குகின்ற எவரேனும் ஆளினால் அத்தகைய பண்டங்களும் சேவைகளும் வழங்கப் படுவதற்கு ஏற்புடையதாகாது.

Scanned with CamScanner

# 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

## அட்டவணை

(பிரிவு [illegible])

நியமிக்கப்படுவதற்கான தகைமையீனம்.

1. ஆளொருவர் —

(அ) பாராளுமன்றத்தின், எதேனும் மாகாண சபையின் அல்லது எதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராகவிருப்பின் அல்லது உறுப்பினராகவாயின் :

(ஆ) இலங்கைப் பிரசையாக இராதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள எதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ;

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள எதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டவராயிருப்பின் அல்லது உட்பட்டவராயிருந்திருப்பின் ; அல்லது

(உ) குற்றநடத்தைக்காக அதிகாரசபையின் உறுப்பாண்மையிலிருந்து அகற்றப்பட்டிருப்பின்

அதிகாரசபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

2. அதிகாரசபையின் தவிசாளரும் முழுநேர உறுப்பினர்களும் தவிர்ந்த, ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின் மூலம், பதவி விலகல் மூலம் அல்லது அகற்றுதல் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், இறப்பின்மூலம், பதவிவிலகல் மூலம் அல்லது அகற்றுதல் மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துவருகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் நியமனத்தை முடிவுறுத்தல்.

3. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், துர்நடத்தைக்காக அல்லது உடல் அல்லது உளத் தகுதியீனத்துக்காக அதிகாரசபையின் தவிசாளரையும் முழுநேர உறுப்பினரையும் தவிர்ந்த, வேறு எவரேனும் உறுப்பினரை பதவியிலிருந்து அகற்றலாம். இப்பந்தியின்கீழ் எவ்வுறுப்பினர் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அவ்வுறுப்பினர் கட்டளையானது கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பந்தியின்கீழ் எவரேனும் உறுப்பினரின் அகற்றுதலானது எதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

Scanned with CamScanner

# 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்



*உறுப்பினர்கள் பதவிவிலகல்.*

**4.** அதிகாரசபையின் தவிசாளர் அல்லது முழுநேர உறுப்பினர் தவிர்ந்த உறுப்பினரொருவர், அமைச்சருக்கு அப்பொருட்பட முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அமைச்சரினால் எழுத்தில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

*இறப்பு, பதவி விலகுதல் அல்லது அகற்றுதல் மூலம் பதவியை வறிதாக்குதல்.*

**5.** அதிகாரசபையின் வேறேதும் உறுப்பினரால் இறப்பின் மூலம், பதவிவிலகல் மூலம் அல்லது அகற்றுதல் மூலம் பதவி வறிதாக்கப்படும் பட்சத்தில், அமைச்சர் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்துவருவதற்கு இன்னொருவரை நியமிக்கலாம்.

*உறுப்பினர்கள் வராமைக்கான லீவு.*

**6.** அதிகாரசபையின் தவிசாளர் முழுநேர உறுப்பினர் ஒருவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர் மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்குச் சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அத்தகைய இயலாமை பற்றி எழுத்தில் அமைச்சருக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன்மேல் அமைச்சர் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய காலப்பகுதியின்போது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறொருவரை நியமிக்கலாம்.

*தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தல்.*

**7.** (1) தவிசாளர் அல்லது முழுநேர உறுப்பினர்களுள் ஒருவர், சுகவீனம் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருப்பின், அவரிடத்திற் செயலாற்றவென அமைச்சர் அதிகாரசபையின் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(2) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், துர்நடத்தைக்காக அல்லது உடல் அல்லது உளத் தகுதியீனத்துக்காக அதிகாரசபையின் தவிசாளரை அல்லது முழுநேர உறுப்பினர்களுள் ஒருவரை அகற்றலாம். இப்பந்தியில் எவ்வாள் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அத்தகைய ஆள், கட்டளையானது கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தவிசாளர் அல்லது முழுநேர உறுப்பினர்களுள் எவரேனும் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின்மூலம் விடயத்துக்கேற்றவாறு தவிசாளர் அல்லது முழுநேர உறுப்பினர் பதவியிலிருந்து அல்லது தலைமைத் தவிசாளர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அத்தகைய பதவிவிலகல் அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் கூட்டங்கள்.*

**8.** (1) அதிகாரசபையின் தவிசாளர், சமுகமாயிருப்பின், அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு வராதிருப்பின், சமுகமாயிருக்கும் முழுநேர உறுப்பினர்களுள் ஒருவர் தலைமை வகித்தல் வேண்டும் என்பதுடன் அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர், அத்துடன் முழுநேர உறுப்பினர் அனைவரும் வராதிருப்பின், அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமை வகிக்கவெனச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் ஒருவரைத் தெரிந்தெடுத்தலும் வேண்டும்.

Scanned with CamScanner

(2) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் [illegible] உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை வகிக்கின்ற தவிசாளர் அல்லது அவர் வராதிருப்பின் உறுப்பினர், அவரது சொந்த வாக்குடன் சேர்த்து, அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கும் 71 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் அமைய, அதிகாரசபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்கள் கொண்டுநடாத்துதலையும் ஒழுங்குபடுத்தலாம்.

நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக நடவடிக்கைகள், செயல் அல்லது முடிவு செல்லுபடியற்றதாகக் கருதப்படலாகாது.

9. அதிகாரசபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

அதிகாரசபையின் இலச்சினை.

10. (1) அதிகாரசபையின் இலச்சினை தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையினது பிரயோகமானது, தவிசாளரின் அல்லது அத்தகைய இலச்சினையின் பிரயோகத்தை மெய்யென்று உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட, அதிகாரசபையின் வேறேதேனும் உறுப்பினரின் கையொப்பத்தினால் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களினால் அக்கறை வெளிவிடப்படுதல்.

11. அதிகாரசபையின் ஏதேனும் நடவடிக்கையின் விடயப்பொருளில் அல்லது அதிகாரசபையினால் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் முடிவைச் சார்ந்திருக்கின்ற ஏதேனும் கருமத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர் அதிகாரசபையின் கூட்டமொன்றில் அவரது அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அத்தகைய கருமம் தொடர்பிலான ஏதேனும் நடவடிக்கையில் அல்லது முடிவில் பங்குபற்றுதலுமாகாது.

Scanned with CamScanner

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387; (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம், அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, டிரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் வீதி, கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

Scanned with CamScanner